தமிழரசு

Tamilarasu (Monthly)

அக்டோபர் 2025 (October 2025)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

தமிழ்நாடு அரசு
செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 56
இதழ் (Issue) : 4

கல்வியில் சிறந்த தமிழ்நாடு

2025–2026 ஆம் கல்வி ஆண்டிற்கான
"புதுமைப் பெண்" மற்றும் "தமிழ்ப் புதல்வன்"
திட்டம் தொடக்கம்...

அன்புக் கரங்கள் திட்டம்

தொடங்கி வைப்பவர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
15.09.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில்,
“அன்புக்கரங்கள்” திட்டத்தைத் தொடங்கிவைத்து, அன்புக்கரங்கள் திட்டப் பயனாளிகளுக்கு
அடையாள அட்டைகளை வழங்கினார். உடன்,
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு வருடம்: புரட்டாசி - ஐப்பசி
அக்டோபர் 2025

மலர் : 56 விலை ரூ.30 இதழ் : 4

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
மு. சத்தியசீலன்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் /
உதவி இயக்குநர்
எஸ். உதயா கதிரவன்

பொறுப்பாசிரியர்கள் /
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
மு. மணிமேகலை

உதவி ஆசிரியர்
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

முதுநிலை ஓவியர்
ரா. சாமுண்டீஸ்வரி

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினிவழி வடிவமைப்பாளர்கள்
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

பிழைதிருத்தம் மேற்கொள்பவர்
த. பிரியா

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர். (குறள்: 855)

மனத்தில் மாறுபாடான எண்ணம் உருவானால் அதற்கு இடம்தராமல் நடக்கக்கூடிய ஆற்றலுடையவர்களை வெல்லக் கூடியவர்கள் யாருமில்லை.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான "புதுமைப்பெண்" மற்றும் "தமிழ்ப் புதல்வன்" திட்டங்கள் 4

★ இடைநிற்றல் இன்றிக் கல்வியைத் தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கும் "அன்புக்கரங்கள்" திட்டம் 23

★ ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தால் ரூ.15,516 கோடி முதலீட்டில் 17,613 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 44

★ ஓசூரில் "தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2025" ரூ.24,307 கோடி முதலீட்டில் 49,353 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 47

★ சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் "இசைஞானி இளையராஜா" அவர்களுக்கு பொன்விழா ஆண்டு பாராட்டு விழா 54

★ சென்னை, கிண்டியில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களுக்குத் திருவுருவச்சிலை 60

★ பஹ்ரைன் நாட்டின் அஹ்லியா பல்கலைக் கழகத்துடன் நான் முதல்வன் ஸ்கவுட் திட்டத்தின் கீழ்த் தமிழ்நாட்டு மாணவர்கள் உலகளாவிய பயிற்சி பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 62

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பயிற்சி வினா-விடைத்தாள் 78

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களும், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மாண்புமிகு தெலங்கானா முதலமைச்சர் திரு. **அ.ரேவந்த் ரெட்டி** அவர்களும், 25.09.2025 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" என்னும் கருப்பொருளில் தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியினைக் கொண்டாடும் விழாவில், 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான "புதுமைப்பெண்" மற்றும் "தமிழ்ப் புதல்வன்" திட்டங்களை தொடங்கி வைத்து, புதுமைப்பெண் திட்ட பயனாளிக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள்.

“கல்வியில் சிறந்த தமிழ்நாடு”

2025 - 2026ஆம் கல்வி ஆண்டிற்கான “புதுமைப்பெண்” மற்றும் “தமிழ்ப்புதல்வன்” திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாண்புமிகு தெலங்கானா முதலமைச்சர் திரு. அ. ரேவந்த் ரெட்டி அவர்களும் 25.09.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” என்னும் கருப்பொருளில் தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியினைக் கொண்டாடும் விழாவில், 2025-2026ஆம் கல்வி ஆண்டிற்கான “புதுமைப்பெண்” மற்றும் “தமிழ்ப் புதல்வன்” திட்டங்களைத் தொடங்கிவைத்து, மாணவ, மாணவியர்களுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள். இந்த ஆண்டு, 2.57 இலட்சம் மாணவ, மாணவியர் “புதுமைப் பெண்” மற்றும் “தமிழ்ப் புதல்வன்” திட்டங்களில் பயன்பெறவுள்ளார்கள்.

சமூக நீதியுடனான சமத்துவ சமுதாயத்தை கல்வி, விளையாட்டு, கலைகள் வாயிலாக கட்டமைக்க முடியும் என்பதன் சான்றாகத் தமிழ்நாடு தன் பாதையில் முன்னேறி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. கல்வி எழுச்சியால் தமிழ்நாடு அடைந்துள்ள உயரத்தைக் கொண்டாடும் விதமாகக் ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ விழா நடைபெற்றது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

மாணவர்கள் பசியின்றிப் பள்ளிக்கு வரவும், மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்திடவும், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைத்திடும் நோக்கிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படத் தொடங்கிய பின் மாணவர்களின்

வருகைப் பதிவு அதிகரித்துள்ளது. மலைப் பகுதிகளில் தொலைவில் இருந்து வரும் குழந்தைகள், அடித்தட்டு மக்களின் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பெருமளவில் பயனடைந்து வருகிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ்த் தற்போது 37,416 பள்ளிகளில் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 20 இலட்சத்து 59 ஆயிரம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

இத்திட்டத்தால் முன்பைவிட மாணவர்களின் கவனிக்கும் திறன் கூடியுள்ளதையும், எழுதும்-வாசிக்கும் திறன் அதிகரித்துள்ளதையும், மாணவர்கள் முன்பைவிட நல்ல உடல்நலத்தோடு ஆரோக்கியமாக இருப்பதையும் மாநிலத் திட்டக் குழுவின் ஆய்வு தெரிவிக்கிறது. 2023 டிசம்பர் தொடங்கி 2024 டிசம்பர் வரை மருத்துவமனைகளுக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையும் 60 சதவிகிதம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

'நான் முதல்வன்' திட்டம்

தமிழகத்தின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் திறன் மேம்பாடு, வழிகாட்டுதல் திட்டமான 'நான் முதல்வன்' திட்டம் 01.03.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கப்பட்டது.

'நான் முதல்வன்' திட்டத்தின் வாயிலாக வகுப்பறைகளுக்கும் வேலைவாய்ப்புச் சந்தைக்கும் இருந்த இடைவெளி குறைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மேற்கொண்டு என்ன படிக்கலாம்; அவர்களுக்கு எந்தத் துறையில் ஆர்வம் உள்ளது என்பதைக் கண்டறிந்து அவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டுவதோடு அவர்களின் வேலைவாய்ப்பையும் உறுதி செய்கிறது. மாணவர்களுக்கு வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வாயிலாக அவர்கள் தங்கள் வாழ்க்கையை மேலும் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வதோடு, போட்டித் தேர்வுகளுக்கும் நேர்முகத் தேர்வுகளுக்கும் தயாராகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் 14,63,764 மாணவர்கள் திறன் பயிற்சி பெற்றுள்ளனர்.

தொழில்துறையில் முக்கியமான நிறுவனங்களில் பணியிலமர்த்துவதோடு, UPSC தேர்வுகளுக்குத் தயார்செய்வதில் இத்திட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது. 2021இல் 27 பேர் மட்டுமே தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். "நான் முதல்வன்" கல்வி உதவித்தொகை (Scholarship) திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபின் ஆண்டுதோறும் 1,000 பேர் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாதம் 7,500 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. முதற்கட்டத் தேர்வில் வெற்றிபெற்றதன் பின்னர் நேர்முகத் தேர்வுக்கு

தில்லி செல்லும் வரையிலான செலவுகளையும் அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின் மூலம், 2023-2024இல் 39 பேர், 2024-2025இல் 50 பேர் எனத் தமிழ்நாட்டில் இருந்து தேர்வாகியுள்ளனர்.

'புதுமைப் பெண்' திட்டம்

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000/- வீதம் உதவித் தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டத்தினை 05.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் பட்டம், பட்டயம் அல்லது ஐ.டி.ஐ. பயிலும் மாணவிகளுக்கு

உதவித்தொகை வழங்கப்படுவதால் அரசுப் பள்ளி மாணவியர்களின் உயர்கல்வி வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றன. தற்போது அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது 5 இலட்சத்து 29 ஆயிரம் மாணவியர் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர். மாநிலத் திட்டக் குழுவின் ஆய்வறிக்கையில், முதல் ஆண்டு மட்டும் வழக்கமான எண்ணிக்கையைவிட 13,681 பெண்கள் அதிகமாகக் கல்லூரிகளில் உயர்கல்வி பயில சேர்ந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் கல்லூரிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. 2025-இல் இத்திட்டத்தில் திருநங்கையரையும், பால்புதுமையினரையும் தமிழ்நாடு அரசு இணைத்திருக்கிறது.

'தமிழ்ப் புதல்வன்' திட்டம்

6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும், 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- உதவித் தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 09.08.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தற்போது 3.92 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

'புதுமைப் பெண்' மற்றும் 'தமிழ்ப் புதல்வன்' திட்டங்கள் தமிழ்நாட்டின் உயர்கல்வியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. வறிய குடும்பங்களில் பொருளாதாரச் சூழல் காரணமாகக் குழந்தைகளைப் படிக்கவைக்காமல் வேலைக்கு அனுப்பிக்கொண்டிருந்த நிலையை இத்திட்டங்கள் மாற்றி அமைத்திருக்கின்றன.

பள்ளிக்கல்வியிலிருந்து உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 75 சதவிகிதமாக உயர்ந்து இந்தியாவிலேயே உயர்கல்வியில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த உதவித்தொகை என்பது வெறுமனே பண உதவி அல்ல. கண்ணியம், வெற்றி பெறும் கனவு, சமத்துவம் ஆகியவற்றிற்கான முதலீடு ஆகும்.

மாதிரிப் பள்ளிகள்

2021-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மாதிரிப் பள்ளிகளில் JEE, NEET, CLAT, CUET போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கு மாணவர்களுக்கு முறையாகப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. உண்டு உறைவிடப் பள்ளிகளாகச் செயல்படும் பள்ளிகளில் விடுதி வசதி, பரிசோதனைக் கூடங்கள், நூலகங்கள், கணினி வசதி, விளையாட்டு வசதிகள் போன்றவற்றோடு கலைத் திறனையும் தனித்திறன்களையும் வளர்த்துக்கொள்ளும் வகையிலானப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

கடந்த நான்காண்டுகளில் நாட்டின் முதன்மைக் கல்வி நிறுவனங்களுக்கு முதன்முறையாக 1,800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கிராமப்புற அடித்தட்டு மாணவர்கள் மருத்துவம், சட்டம், பொறியியல், அறிவியல் புலங்களில் உயர்கல்வி பயிலச் சென்றிருக்கின்றனர். சிலர் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கும் உயர்கல்விக்காகச் சென்றிருக்கின்றனர். இவர்களுக்கான கல்விச் செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அளிக்கும் கல்வி உதவித்தொகை அச்சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பெரிதும் உதவுகின்றது. முதல் வகுப்புத் தொடங்கி பி.எச்டி வரையிலான அவர்களுடைய ஒட்டு மொத்தக் கல்விக்கும் இத்தொகை உதவிகரமாக உள்ளது.

உயர்கல்வி வழிகாட்டித் திட்டம், ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான கல்வி உதவித்தொகை இவை இரண்டும் உயர்கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்து சமூக மாற்றத்திற்கு மாபெரும் பங்களித்திருக்கின்றன.

மாணவர்களிடையே சாதி, சமூக வேறுபாடுகளைக் களைந்து, நல்லிணக்கத்தை வளர்த்திடும் வகையில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு அரசுத் துறைகளின்கீழ்ச் செயல்பட்டு வரும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகளுக்குச் 'சமூக நீதி விடுதிகள்' என்று பெயர் மாற்றம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

விளையாட்டுத் துறையில் முன்னோடியாக விளங்கும் தமிழ்நாடு

கல்வியில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு விளையாட்டுத் துறையிலும் முன்னோடியாக விளங்கி வருகிறது. தமிழ்நாடு அரசால் ரூ.548 கோடி செலவில் விளையாட்டிற்கான கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. பல்வேறுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ரூ.150 கோடி அளவில் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும், ஒரு மினி விளையாட்டரங்கம் உருவாக்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் மாவட்ட விளையாட்டு வளாகங்கள், ஒலிம்பிக் அகாடமிகள், தடகள மைதானங்கள், ஹாக்கி மைதானம், உள்விளையாட்டு அரங்கங்கள், சிறப்பு அகாடமிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஸ்டார் அகடமிக்கள் 38 மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. உள்ளூர் விளையாட்டு வீரர்களின் திறமைகளை அடையாளங்கண்டு ஊக்குவிப்பதற்கான பயிற்சிகள், ரூ.86 கோடியில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்குதல், ரூ.100 கோடியில் நகர்ப்புற விளையாட்டு வசதிகள் எனப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன் வாயிலாக விளையாடுவதற்கும் பயிற்சி எடுத்துக்கொள்வதற்கும் நகர்ப்புறங்களை மட்டும் நம்பியிராமல் கிராமப்புறத்தில் உள்ள மாணவர்களும், இளைஞர்களும் பயன் பெறுகின்றனர்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் ஃபவுண்டேஷன் ரூ.29.63 கோடியில்

விளையாட்டு வீரர்களுக்குப் பொருளாதார ரீதியாகவும் பொருள் வடிவிலும் உதவி இருக்கிறது. மரபார்ந்த தடகளத்தைப் போலவே பாரா-ஒலிம்பிக் தடகளமும் அதே அளவு முக்கியத்துவத்தைப் பெற்றிருப்பது எல்லோரையும் உள்ளடக்கிய தன்மைக்குச் சான்றாக உள்ளது.

தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய, தேசிய, மாநில அளவில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் அரசுத் துறைகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

'எண்ணும் எழுத்தும்' திட்டத்தின் வாயிலாக ஒன்று முதல் மூன்றாம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கான எண்ணறிவும் எழுத்தறிவும் உறுதிசெய்யப்படுகிறது. எட்டு வயதிற்குள் குழந்தைக்கு இந்த அறிவை ஊட்டுவதை ஆசிரியர்கள் நிகழ்த்திக்காட்டுகின்றனர்.

'மணற்கேணி' என்கிற டிஜிட்டல் கற்றல் தளத்தைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் வாயிலாக மாணவர்கள் வீடியோ விளக்கங்களுடன் தங்கள் பாடங்களைப் பயில முடியும். உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் மாணவர்கள் அனைவரும் பயன்படுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள இச்செயலி வாயிலாக ஆசிரியர்கள் கற்பிக்கும்பொழுது மாணவர்களுக்கு அது காட்சிரீதியான அனுபவத்தை வழங்குவதால் பாடப்பொருளை எளிதில் நினைவில் வைத்துக்கொள்கின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் நிறுவப்பட்டுள்ள ஸ்மார்ட் வகுப்பறைகள் எல்லா மாணவர்களும் ஆசிரியர்களும் மணற்கேணியைப் பயன்படுத்துவதை எளிதாக்குகிறது.

மாணவர்களின் கலைத்திறனை வளர்க்கும் கலைத் திருவிழா பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அரசுப் பள்ளி மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதிலும் ஆசிரியர் – மாணவர் உறவை மேம்படுத்துவதிலும் கலைத் திருவிழாக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சிறார்களின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்காக வாசிப்பு இயக்கம், சிறார் இலக்கியத் திருவிழா, வினாடி வினா போட்டிகள் என மாணவர்களின் தனித்திறன்களை வளர்த்து அவர்களை முழுமையான மனிதர்களாக இச்சமூகத்திற்கு ஒப்படைப்பதைத் தமிழ்நாடு அரசு தன் கடமையாகக் கொண்டுள்ளது.

வேளாண்குடியிலிருந்தும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களிலிருந்தும் தினக்கூலிக் குடும்பங்களில் இருந்தும் வந்த முதல் தலைமுறைக் குழந்தைகள் மெல்ல மெல்ல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நுழைந்து, சமூகநீதி காத்தப் பெருமைமிகு வரலாறு கொண்ட தமிழ்நாடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 2021 முதல் கல்வியில் சமூகநீதியை நிலைநாட்டுவதில் செயலூக்கத்தோடு பெரும் பாய்ச்சலை நிகழ்த்தி இருக்கிறது. ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள இத்தகைய

நடவடிக்கைகளும் செயல்படுத்தி வரும் திட்டங்களும் மாபெரும் கல்வி எழுச்சிக்கு வழிகோலியுள்ளன.

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம்

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டமாக இவ்விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால் பயன்பெற்று வரும் மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்து வருவது குறித்தும், உடல் ஆரோக்கிய மேம்பாடு குறித்தும் புள்ளி விவரங்களோடு காணொலி மூலம் விளக்கப்பட்டது. டாக்டர் அருண் குமார் அவர்கள் காலை உணவுத் திட்டத்தின் ஊட்டச்சத்து நன்மைகள் குறித்தும், திரைப்பட இயக்குநர்கள் திரு. பிரேம் குமார், திரு. தமிழரசன் பச்சைமுத்து ஆகியோர் இத்திட்டத்தின் பயன்கள் குறித்து உரையாற்றினர்.

கல்வியில் தமிழ்நாடு சிறந்து விளங்குவது குறித்து திரைப்பட இயக்குநர்கள் திரு. வெற்றிமாறன், திரு. மிஷ்கின், திரு. தியாகராஜன் குமாரராஜா ஆகியோர் பாராட்டி உரையாற்றினார்கள்.

"நான் முதல்வன்" திட்டத்தில் இணைந்துள்ள தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் குறித்த குறும்படம் ஒளிபரப்பப்பட்டதுடன், "நான் முதல்வன்" திட்ட இயக்குநர் திருமதி சாந்தி அவர்கள் திட்டத்தின் பயன்கள் குறித்தும், அதனால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும், "நான் முதல்வன்" திட்டத்தால் பயனடைந்த மாணவ, மாணவியர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இத்திட்டத்தின் மூலம் பணியில் சேர்ந்த மாணவி தான் பெற்ற முதல் மாத சம்பளத்தை மேடையிலே தனது தந்தையிடம் வழங்கினார். அதனைத் தொடர்ந்து, அசோக் லேலண்ட் நிறுவனத்தின் திரு. பாலா, ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. சந்துரு, பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோர் "நான் முதல்வன்" திட்டம் மாணவர்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்துப் பாராட்டி உரையாற்றினர்.

"விளையாட்டுச் சாதனையாளர்கள்" பிரிவில் தமிழ்நாடு விளையாட்டுத் துறையில் சாதனைப் படைத்து வருவது குறித்த குறும்படம் ஒளிபரப்பப்பட்டது. மேலும், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் மனோஜ், வீராங்கனை ரோசி ஆகியோர் தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், அதன்மூலம் தாங்கள் பெற்ற பயன்கள் குறித்தும் பகிர்ந்து கொண்டனர். கிரிக்கெட் வீரர் திரு. நடராஜன், திரைப்பட இயக்குநர் திரு. மாரி செல்வராஜ் ஆகியோர் தமிழ்நாடு அரசின் விளையாட்டுத் துறைத் திட்டங்கள் குறித்து உரையாற்றினர்.

"புதுமைப் பெண்-தமிழ்ப் புதல்வன்" திட்டத்தால் பயன்பெற்ற மாணவியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். திரைப்பட நடிகர் திரு. சிவகார்த்திகேயன் அவர்கள் "புதுமைப் பெண்-தமிழ்ப் புதல்வன்" திட்டம் குறித்து உரையாற்றினார்.

“அரசுப் பள்ளிகளிலிருந்து முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் சென்ற சாதனையாளர்கள்” பற்றிய குறும்படம் ஒளிபரப்பப்பட்டது. இத்திட்டத்தால் பயன்பெற்றவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்காற்றி வரும் சமூகச் சிந்தனையாளர்கள், சிறப்பாகப் பணியாற்றிய தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பயிற்றுனர்கள், கல்வி அமைப்புகளின் நிருவாகிகள் ஆகியோரது சேவைகளைப் பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தெலங்கானா முதலமைச்சர் திரு. அ.ரேவந்த் ரெட்டி ஆகியோர் சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு, சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.09.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற, “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” விழாவில் ஆற்றிய உரை.

“கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பு விருந்தினராக வருகை தந்து நம்மைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய தெலங்கானா மாநிலத்தின் My dear Chief Minister மாண்புமிகு திரு. ரேவந்த் ரெட்டி அவர்களே,

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் மாண்புமிகு தம்பி உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே,

அரசியல் இயக்கத்தின் தலைவர்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம், இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு அலுவலர்களே,

வருகை தந்துள்ள சிறப்பு விருந்தினர்களான திரைக் கலைஞர்கள், கல்வியாளர்கள், அனைத்துச் சான்றோர் பெருமக்களே,

என் கண்ணின் மணிகளான மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இங்கே பேசிய மாணவர்களின் பேச்சைக் கேட்க கேட்க, நான் மிகவும் Emotional ஆகிவிட்டேன். ஏனென்றால், உங்களுடைய கருத்துக்களையும், Feedback-கையும் கேட்கும்போது, நாம் உழைக்கின்ற உழைப்புக்கான பலன், நம்முடைய கண் முன்னாலேயே தெரிகிறது என்று நான் இங்கே உணர்ந்திருக்கிறேன்; அதற்காகப் பெருமைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எல்லோரும், தமிழ்நாடு எந்தளவுக்குக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது, எப்படியெல்லாம் திட்டங்களைக் கொண்டுவந்து, எத்தனை இடர்கள் வந்தாலும், தன்னுடைய மாணவர்களை முன்னேற்றுகிறது என்று பேசினார்கள்!

இந்த நிகழ்ச்சி நடத்துவதற்கு முக்கியக் காரணம், எங்களைப் பாராட்டிக் கொள்வதற்காக அல்ல, இன்றைக்கு நாங்கள் உங்களைக் கொண்டாடுவதைப் பார்த்து, அடுத்தடுத்த Batch மாணவர்களுக்கும், இன்னும் படிப்பு மீது ஆர்வம் அதிகமாக வேண்டும்! அதுதான் முக்கியம்! அதிலும், மாண்புமிகு தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி அவர்கள், இந்த விழாவுக்கு வந்து, நம்மையெல்லாம் பெருமைப்படுத்தி இருக்கிறார்; மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார்!

தங்கை கனிமொழி அவர்கள் மூலமாக, மாணவர்கள் நிகழ்ச்சி என்று சொல்லி அழைத்ததும், உடனே OK சொல்லி, பல பணிகளுக்கு இடையிலே இங்கே வந்திருக்கிறார். நம்முடைய அரசின் மகளிர் விடியல் பயணம் திட்டம் போலவே, தெலங்கானா மாநிலத்திலும், மகாலட்சுமி திட்டம் என்கிற பெயரில், பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்துப் பயணத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். அதேபோல, தெலங்கானா மாநிலத்தில் செயல்படுத்துகின்ற நல்ல திட்டங்களை

என்னோட வெற்றிக்கும், அவங்களோட வெற்றிக்கும் பின்னாடி இருக்கிற அரசுக்கும் **நான் முதல்வன்** திட்டம் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி...

செல்வி ராஜேஸ்வரி அவர்கள்

என் பெயர் ராஜேஸ்வரி. நான் கல்வராயன் மலை, கருமாந்துறை, சேலம் மாவட்டத்திலிருந்து வர்றேன். நான் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் கருமந்துறையில் படிச்சிட்டிருக்கேன். எனது அப்பா என் பிள்ளைங்க ஒரு டிகிரியாவது வாங்க வேண்டும் என்று கஷ்டப்பட்டு எங்களைப் படிக்கவச்சாரு. என்னிடம் வந்து அவர் டாக்டர், எஞ்சினியர் எனப் பல பெரிய பொசிஷனுக்கு போகனும்னு அடிக்கடி சொல்லுவாரு. நான் பத்தாவது படிக்கிற வரைக்கும் எனக்கு அதப்பத்தி எதுவும் தெரியாது. பத்து முடித்து 11 ஜாயின்ட் பண்ணும்போது என் அப்பா இறந்துட்டாரு. அதற்குப் பிறகு என்ன பண்ணலாம் என்று எனக்கு ஒன்றுமே தெரியாது. என்ன படிக்கலாம் என்று என் சார் அவர்களிடம் கேட்டேன். அவர் சொன்னார் ஜே.இ.இ எழுதினால் எஞ்சினியரிங் போகலாம், நீட் எழுதினால் டாக்டர் சைட் போகலாம். அதன் மூலம் மேல்படிப்புக்கு செல்லலாம் என்று அப்பவே டிரை பண்ண ஆரம்பிச்சிட்டேன், அது மட்டுமில்லாமல் அரசு மூலமாக மார்னிங் வந்து ஒன் அவர் வந்து கிளாஸ் எடுப்பாங்க. அது ரொம்ப யூஸ் புல்லா இருந்திச்சி. அவங்க பண்ணின சப்போட்ல தான் இன்னைக்கு ஐ.ஐ.டி. மெட்ராஸ்ல ஆரோ டிபார்ட்மென்ட் எடுத்து படிச்சிட்டிருக்கேன். நான் மட்டுமில்லாமல் இன்னும் ஐ.ஐ.டி.அதர் ஸ்டேட்ஸ்ல 41 ஸ்டூடன்ஸ் படிச்சிட்டிருக்காங்க. என்னோட வெற்றிக்கும் அவங்களோட வெற்றிக்கும் பின்னாடி இருக்கிறது தமிழ்நாடு அரசுதான். இந்த நேரத்தில் இந்த நான் முதல்வன் திட்டம் தந்த தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ■

எனது படிப்புக்கு சப்போர்ட்டாக புதுமைப்பெண் திட்டம் தந்த மாண்புமிகு முதல்வர் அய்யாவுக்கு நன்றி....

திருமதி சத்யா அவர்கள்

எனது பெயர் சத்யா, கவர்ன்மென்ட் பாலிடெக்னிக் காலேஜ் வலங்கைமான்ல மூன்றாம் ஆண்டு கணினிப் பொறியியல் படிக்கிறேன். என்னோட அம்மா வந்து பத்து வரைக்கும்தான் படிக்க வைக்க முடியும் என்று கூறினார். எங்க அப்பா எனது இரண்டு வயதில் வெளிநாடு சென்றவர் திரும்பி வரமுடியாமல் போனவர். அம்மா பத்தாவது வரைக்கும் ரொம்ப சிரமப்பட்டு படிக்க வைத்தார். நல்லா படிச்சேன் இன்னும் படிக்கனும்னு ஆசை. எங்க அம்மாவால படிக்க வைக்க முடியல. ஆனா நான் அதன்பிறகு திருமணத்திற்கு அப்புறம் எனது பையனையும் படிக்க வைக்க முடியல. அதனால் நான் மாடு வைத்திருந்த காரணத்தினால் அதை வைத்து வேலை பார்த்து பசங்களைப் படிக்க வைக்க நினைத்தேன். அதன்படி எனது பையனை டிப்ளமோ படிக்க வைத்து நானும் படிக்க ஆரம்பித்தேன். 17 ஆண்டுகள் கழித்து நீங்கள் படிக்கிறீர்கள். உங்களால் எப்படி படிக்க முடியும் என்று கூறினார்கள். அதற்கு நான் என்ன சொன்னேன்னா, என்னால் படிக்க முடியும் என்பதை நிரூபிச்சி இரண்டு மாதம் கழித்து நான் கிளாஸ் பர்ஸ்ட் வந்தேன். எனது கணவருக்கு என்னையும் சேர்த்து படிக்க வைக்க வேண்டும் என்ற சுமையும் கொடுத்திட்டேன் என்ற உறுத்தல் எனக்கு வந்தது. அதன் பிறகு எனக்கு முதன்முதலில் மகளிர் உதவித்தொகை கிடைத்தது. பிறகு எனக்குப் புதுமைப் பெண் ஸ்காலர் ஷிப் எய்டட் ஸ்கூலுக்கும் உண்டு என்றவுடன் அதுவும் எனக்குக் கிடைக்க ஆரம்பித்தது. இந்த ஸ்காலர் ஷிப் கிடைப்பதற்கு பிறகு எனது கணவரை ரொம்ப கஷ்டப்படுத்தினேன்ங்கிற எண்ணம் எனக்குச் சுத்தமாகப் போய்விட்டது. இப்ப நானும் எனது பையனும் ஒரே காலேஜில் ஒரே டிபார்ட்மென்டில் ஒரே கிளாசில் படிக்கிறோம். படிக்கிறதுக்கு வயது ஒரு தடையில்லை என்பதை நான் காண்பிச்சிட்டேன். எனக்கு இப்ப படிக்கிறதுக்கு இவ்வளவு சப்போர்ட்டாக இருந்தது முதலமைச்சர் அய்யா தந்த மகளிர் உதவித் தொகையும், புதுமைப்பெண் திட்டமும்தான். அதற்கு மாண்புமிகு முதல்வர் அய்யாவுக்கு நன்றி அய்யா. ■

தமிழ்நாட்டில் செயல்படுத்த நாங்களும் தயாராக இருக்கிறோம். இதுதான் ஆரோக்கியமான ‘வளர்ச்சி’ அரசியல்!

போராட்டங்களில் உருவான தெலங்கானா மாநிலத்தைப் போராட்டக் குணத்துடன் பாதுகாத்து, இந்தியாவின் இளம் தலைவர் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுடைய பிரதிநிதியாக அவர் வழி நடத்திக் கொண்டிருக்கிறார். அதற்காக நான் முதலில் அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இங்கே கூடியிருக்கின்ற மாணவ, மாணவியரைப் பார்க்கும்போது எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது! மாணவச் செல்வங்களே! நீங்கள் படித்து முன்னேறுவதால், நீங்கள் மட்டுமல்ல, உங்கள் குடும்பமும் முன்னேறப் போகிறது; உங்களுடைய அடுத்தடுத்த தலைமுறைகளும் முன்னேறப் போகிறது! குடும்பங்கள் முன்னேறினால், மாநிலங்கள் முன்னேறும்! மாநிலங்கள் முன்னேறினால், நாடு முன்னேறும்! அதனால்தான், நாம் தொடர்ந்து கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்!

ஆயிரம் ஆண்டுகளாகச் சாதி எனும் கால் முளைத்த சதி! இந்தச் சமூகத்தை ஆட்கொண்டதால் நம்முடைய கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது. வரலாறு நெடுக இந்த ஆதிக்கத்துக்கு எதிராக, கலகம் செய்த புரட்சியாளர்கள் இருந்து கொண்டே தான் இருக்கிறார்கள்! அந்தத் தொடர்ச்சியின் உச்சமாக திராவிட இயக்கம், தமிழ் மண்ணில் நிகழ்த்திய புரட்சிதான், இன்றைக்கு நாம் இந்தளவுக்கு வேகமாக நடைபோட க் காரணமாக இருக்கிறது!

அன்றைக்கு, சென்னை மாகாணப் பள்ளிகளில், நீதிக்கட்சி மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். தொடர்ந்து, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழ்நாடு

முழுவதும் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைவரையும் எப்பாடுபட்டாவது பள்ளிகளுக்கு அழைத்து அவர்களைப் படிக்க வைக்கவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான்! அதுதான், படிப்படியாக வளர்ந்து இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு கொண்டு வந்திருக்கின்ற காலை உணவுத் திட்டமாக உருப்பெற்றிருக்கிறது!

தொடக்கக்கல்வி முடித்துக்கொண்டு, மேல்நிலைக் கல்விக்குச் செல்லக்கூடிய மாணவர்களுக்குப் போக்குவரத்து வசதி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று சட்டமன்ற உறுப்பினராக நான் முதன்முதலாக அவையில் எடுத்து வைத்த கோரிக்கையை ஏற்று, இலவச பஸ் பாஸ் திட்டத்தை அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். அடுத்து, தலைவர் கலைஞர் கல்லூரிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கல்லூரிக் கல்விக்குச் செல்வதற்கு முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு ஃபீஸ் இல்லை என்று சொன்னார்.

அனைத்துச் சமூகத்தினருக்கும் கல்விச் சாலைகளில் இடம் கிடைக்க, இடஒதுக்கீட்டை உயர்த்தினார். இப்படி, ஏராளமான போராட்டங்கள் நிறைந்தது நம்முடைய கல்விப் பயணம்! இந்தப் பயணத்தை அடுத்தக் கட்டத்துக்குக் கொண்டு போகத்தான், நம்முடைய திராவிட மாடல் அரசு நான்கு ஆண்டுகளாகப் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், மாடல் ஸ்கூல்ஸ், ஸ்மார்ட் வகுப்பறைகள், விளையாட்டுத் துறைக்கு சிறப்புக் கவனம் செலுத்தும் திட்டங்கள் என்று ஏராளமான திட்டங்களைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறோம்!

ஒரு வேளை உணவு தருவதாலோ, மாதம் ஆயிரம் ரூபாய் தருவதாலோ, "என்ன பெரிய மாற்றம் வந்துவிடும்?" என்று சிலர் நினைக்கலாம். காலை உணவுத் திட்டம் அறிமுகம் செய்ததில் இருந்து, மாணவர்களுடைய வருகை அதிகரித்திருக்கிறது. புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்ததில் இருந்து, ப்ளஸ் 2 முடித்த மாணவர்களில் 75 விழுக்காடு மாணவர்கள் உயர்கல்வியில் சேருகிறார்கள். குறிப்பாக, பெண்கள் உயர்கல்வியில் சேருவது அதிக அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்த ஆயிரத்து 878 மாணவர்கள் கடந்த 4 ஆண்டுகளில், முதன்மை

எங்களைப் போன்ற ஏழை மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து உதவிகளையும்செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி...

செல்வன் சொக்கலிங்கம் அவர்கள்

என் பெயர் சொக்கலிங்கம். நான் தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.ஏ. தமிழ் மூன்றாம் ஆண்டு பண்ணிக்கிட்டிருக்கேன். எனது பேமிலி ரொம்ப கஷ்டப்படுகிற பேமிலிதான். அப்பா கூலி வேலைதான் பார்க்குறார். வாரத்தின் மூன்று நாள்தான் வேலைக்குப் போவாரு. தினமும் கிடைக்கிற கூலிக்கு எங்களின் வீட்டுச் செலவுக்கே சரியாகப் போயிடும். அதனால் 12 ஆவது முடிச்சதும் திருப்பூர் கம்பெனியில் வேலை பார்த்தேன். அப்போ இந்த ஸ்கீம் கிடையாது. அதுக்கப்புறம்தான் இந்த ஸ்கீம் கொண்டு வந்தாங்க. அதற்குப் பிறகு இந்த ஸ்கீம் ஆலதான் அட்மிஷன் போட்டேன். இப்ப காலேஜ் படிச்சிட்டிருக்கேன். இந்த ஸ்கீம் ஆல ரொம்ப எனக்கு ஹெல்ப் புல்லா இருக்கு. இந்த ஸ்கீம் ஆல எனக்கு காலேஜ் பீஸ் கட்டிக்குவேன், எங்க வீட்டுச் செலவுக்கு நான் ரூபாய் எடுத்துக் கொடுத்திடுவேன். என் தங்கச்சி செலவுக்கும் நான் கொடுத்திடுவேன். அதுதான் எனக்கு ரொம்ப ஹெல்ப் புல்லா இருக்கு. இந்த ஸ்கீம் என்னை மாதிரி பல ஏழை மாணவர்களுக்கு லைப்பே அப்படியே சேஞ் ஆகி நிறைய பேர் என் கூடவே வேலை பார்த்த நிறையபேர் இப்ப காலேஜ்ல படிக்காங்க. எனக்கு இது நல்லதா இருக்கு. எங்களைப் போன்ற ஏழை மாணவர்கள் காலேஜ் படிப்பு படிக்க அனைத்து உதவிகளையும் செய்து வரும் தமிழ்ப்புதல்வன்திட்டம் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

உயர்கல்வி நிறுவனங்களுக்குப் படிக்கச் சென்றிருக்கிறார்கள்.

இன்றைக்குக் கல்வியில், தமிழ்நாடு பெற்றிருக்கின்ற எழுச்சி, இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலங்களைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது! நம்முடைய திட்டங்களை அவர்கள் மாநிலங்களில் செயல்படுத்த Study செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த எழுச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான் கல்விக்குத் தடை ஏற்படுத்தலாம் என்று ஒன்றியத்தில் நினைக்கிறார்கள்! நம்முடைய வளர்ச்சியைப் பார்த்து, ஒதுக்க முடியாமல், தடை ஏற்படுத்துகின்ற சிலருக்கு பயத்தை வர வைக்க வேண்டும்!

நிச்சயம் நம்முடைய திட்டங்களாலும், உங்களுடைய Achievement-ஆலும் அது நடைபெறும்! என்னுடைய இலக்கு... அனைவருக்கும் கல்வி! அனைவருக்கும் உயர்தரக் கல்வி! கல்வி நிலையங்களுக்குள்ளே எந்தக் காரணத்தாலும், எவர் ஒருவரும் வராமல் இருக்கக் கூடாது; தடுக்கப்படக் கூடாது! மாணவர்களான உங்களுக்கு நான் சொல்லிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான்... நம்முடைய அரசு உருவாக்கித் தரக்கூடிய வாய்ப்புக்களை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு உயர, உயரப் பறக்கவேண்டும். அதைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடையவேண்டும். அப்படிப்பட்ட மகிழ்ச்சியைத்தான் இங்கே பேசிய பலர் கொடுத்திருக்கிறீர்கள். இனியும் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். நீங்கள் UG முடித்துவிட்டு வேலைக்குச் சென்றாலும், நல்ல வேலையில் Top Position-ல் சென்று இருந்தாலும், PG-யையும் படிக்க வேண்டும். ஆராய்ச்சிப் படிப்புக்கும் செல்ல வேண்டும். உலகம் மிகவும் பெரியது. உங்களுடைய வெற்றி அனைத்துத் திசைகளிலும் எதிரொலிக்க வேண்டும். நீங்கள் தொடர்ந்து படியுங்கள்... உங்களுடைய படிப்புக்குத் துணையாக உங்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்! கல்வியில் சிறந்த தமிழ்நாடு, கல்வியிலேயே உயர்ந்த தமிழ்நாடாக மாறவேண்டும்; மாறும்; நிச்சயமாக மாற்றுவோம்.

நன்றி! வணக்கம்!

- **தமிழ்நாட்டின் மாடல் ஒட்டுமொத்த இந்தியாவுக்கே உதாரணமாக உள்ளது.**
- **தெலங்கானாவில் அடுத்த ஆண்டு முதல் ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ அமல்படுத்தப்படும்.**

மாண்புமிகு தெலங்கானா முதலமைச்சர் திரு. அ.ரேவந்த் ரெட்டி அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், என்னை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்ததற்கு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு துணை

முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போன்ற மாபெரும் தலைவர்கள் வாழ்ந்த மண் இது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கைகளைச் செயல்படுத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வாழ்த்துகள். மேலும், கல்வித்தந்தை திரு. காமராஜர் அவர்கள் வாழ்ந்த மண் இது.

தமிழ்நாட்டில் இளைஞர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் சிறப்பாக உள்ளனர். இந்த நிகழ்ச்சி தமிழ்நாடு இளைஞர்களை மேலும் ஊக்கப்படுத்தும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறார்கள். தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய இரண்டு மாநிலங்களும் ஒரே மாதிரியான சமூகநீதிக் கொள்கைகளைக் கொண்டவை.

தமிழ்நாட்டு மக்கள் மிகவும் அதிர்ஷ்ட சாலிகள் இதுபோன்ற முதல்வர் கிடைப்பதற்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சமூக நீதிக் கொள்கை தெலங்கானாவை மிகவும் ஈர்த்துள்ளது.

தமிழ்நாடு கல்வியிலும், விளையாட்டிலும் மிகச்சிறந்து விளங்குகிறது. காலை உணவுத் திட்டம் ஈடு இணையற்றத் திட்டம். ஏழை, எளிய மக்களின் நலனுக்காக இந்தத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இதைப் பார்த்ததும் நான் ஒரு முடிவு செய்துவிட்டேன். தெலங்கானாவில் அடுத்த கல்வியாண்டு முதலாகக் காலை உணவுத் திட்டத்தை நாங்களும் செயல்படுத்தப்போகிறோம். எனது இனிய நண்பரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இருந்து இந்தத் திட்டத்தை நான் எடுத்துக்கொள்கிறேன்.

காலை உணவுத் திட்டம் என்பது இதயத்தைத் தொடும் திட்டமாகும். தெலங்கானா அரசு இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டு முதல் அமல்படுத்த உள்ளது. 'புதுமைப் பெண் திட்டம்,' 'நான் முதல்வன் திட்டம்.' 'தமிழ்ப் புதல்வன்' திட்டங்களால் தமிழர்கள் அனைவரும் லக்கியானவர்கள்.

தமிழர்கள், தெலுங்கு மக்கள் இடையே வரலாற்று நட்பு உள்ளது. எனது தெலங்கானாவில் கல்விக்கு முன்னுரிமை, கல்வித்துறைக்குப் பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களைக் கொண்டு வந்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். தமிழ் மக்களாகிய நீங்கள்,

இப்படியொரு சிறந்த முதலமைச்சர் கிடைத்ததற்காகப் பெருமைப்பட வேண்டும். தமிழ்நாட்டின் மாடல் ஒட்டுமொத்த இந்தியாவுக்கே உதாரணமாக உள்ளது.

தமிழ்நாடும், தெலங்கானாவும் ஒரே மாதிரியான கலாச்சாரங்களைக் கொண்டுள்ளன. சமூக நீதியும் தெலங்கானாவிலும், தமிழ்நாட்டிலும் பொதுவானதாக உள்ளது. சமூக நீதியில் எங்களுக்கு முன்னுதாரணம் யார் தெரியுமா? முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

மற்றொரு அறிவிப்பையும் நான் இங்கு அறிவிக்கிறேன். தெலங்கானாவில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் தமிழ்நாட்டில் இருப்பதைப் போலவே 69 சதவிகித இடஒதுக்கீட்டை அமல்படுத்தப்போகிறேன்.

கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்த மாநிலமாகத் தமிழகம் உள்ளது. தெலுங்கு, தமிழக மக்கள் நூற்றாண்டுக் கால நட்பு கொண்டவர்கள். தமிழ்நாடு அரசுப் பட்டதாரிகளுக்குத் தொழில்திறன் பயிற்சி வழங்கப்பட்டு வேலைவாய்ப்புகள் உறுதி செய்கிறது. அதேபோல, தெலங்கானாவிலும் இந்தத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்தப்போகிறோம்.

தெலங்கானாவில் ஆண்டுதோறும் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பொறியியல் மாணவர்கள் படித்து முடித்து வெளியே வருகிறார்கள். ஆனால், அவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. இந்தியா ஸ்கில்ஸ் யூனிவர்சிட்டி என்பதை ஏற்படுத்தி மாணவர்கள் திறமை மேம்படுத்தி வருகிறேன்.

பழைய தொழிற்பயிற்சி மூலம் எந்தப் பயனும் இல்லை. டாட்டா நிறுவனத்திடம் சேர்ந்து நவீனத் தொழிற்பயிற்சி தெலங்கானா மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு போலவே உயர்கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன.

தெலங்கானாவிலும், ஹைதராபாத்திலும் சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் செயல்படும் அளவிற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறோம். இரண்டு மாநிலங்களும் இணைந்து உயர்ந்த கல்வியை ஏழை, எளிய மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். அவர்களின் கனவை நினைவாக்க வேண்டும்.

தமிழ்நாட்டைப் பின்பற்றி, விளையாட்டுப் பல்கலைக்கழகம் உருவாக்கி இருக்கிறேன். தமிழ்நாடு விளையாட்டு வீரர்களை எங்கள் மாநிலத்துக்கு பயிற்சிக்கு அனுப்ப வேண்டும்.

78 ஆண்டுகள் ஆகியும் ஒலிம்பிக்கில் ஒரு தங்கம் வெல்ல முடியவில்லையென்றால் என்ன பயன். ஆகவே, விளையாட்டு வீரர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க விரும்புகிறேன்.

2028இல் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கங்களை வெல்வதற்கு இரண்டு மாநிலங்களும் சேர்ந்து முயற்சி செய்யவேண்டும். உயர்ந்த கல்வியை ஏழை, எளிய மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். இதற்காகத் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட தெலங்கானா அரசு தயாராக உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற கல்வியில் சிறந்த தமிழ்நாடு மாபெரும் கல்வித் திருவிழா நிகழ்ச்சியில் ஆற்றிய உரை

கல்வியில் சிறந்த தமிழ்நாட்டைக் கொண்டாட வந்துள்ள அனைவருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

I warmly welcome my dear brother, Honourable Chief Minister of Telangana Thiru Revanth Reddy Avargal, to this historic event. Welcome sir.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வது ஒன்றே ஒன்றுதான். "கல்வி ஒன்றே அழிக்க முடியாத சொத்து" என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள்.

கல்வி மாணவர்களுக்கான சொத்து என்றால், இங்கு அமர்ந்திருக்கக்கூடிய மாணவர்கள் தான் நம்முடைய தமிழ்நாட்டினுடைய சொத்து.

Last month, our Honourable Chief Minister invited, Honourable Chief Minister of Punjab, Thiru Bhagwant Mann, to join the expansion

of Chief Minister's Breakfast Scheme. In that event, Our Honourable Punjab Chief Minister appreciated the scheme and expressed his willingness to implement it in his state Punjab.

Today, for this Grand Education Festival, our Honourable Chief Minister has invited Honourable Chief Minister of Telangana. I hope this event will also be a meaningful and impactful experience for Honourable Chief Minister of Telangana as well.

நம்முடைய திராவிட மாடல் அரசு, பள்ளிக்கல்வி முதல், உயர்கல்வி, வேலைவாய்ப்பு வரை மாணவர்களுக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

Tamil Nadu is the first state in India to introduce the Mid-day Meal Scheme school students in 1920. This historic achievement was pioneered by the Justice Party almost 100 years ago.

அதேமாதிரி, இந்தியாவிலேயே முதன்முதலாக பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு கொடுத்த முதல் மாநிலமும் நம்முடைய தமிழ்நாடுதான்.

வேலைக்குக் காலையில் சீக்கிரம் எழுந்து செல்லும் பெற்றோர்கள் காலையில் சமைப்பதற்கு நேரம் இல்லாமல், குழந்தைகளுக்குக் காலை உணவு செய்து கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. சாப்பிடாமல் வகுப்பிற்குச் செல்கின்ற குழந்தைக்குக் காது பசியில் அடைக்கும், வயிறு கிள்ளும். அவர்களால் எப்படி அந்த சமயத்தில் பாடத்தைக் கவனிக்க முடியும் பெற்றோர்கள்

வருத்தப்பட்டது உண்டு. இன்றைக்கு அந்த பிரச்சினைகள் எல்லாத்தையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.

பள்ளிப் படிப்பை முடித்த பிறகு குடும்பச் சூழ்நிலைக் காரணமாக மாணவர்கள் உயர்கல்விக்கு வராமல் இருந்துவிடக் கூடாது என்று, தமிழ்நாடு அரசே கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்கள் மூலமாக மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத் தொகையாக வழங்கி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்ற மாணவர்கள் இனிமேல் யாரும், நோட்புக் வாங்க வேண்டும். புராஜெக்ட் மெட்டிரியல்ஸ் வாங்கவேண்டும். கால்குலேட்டர் வாங்க வேண்டும் என்று அவர்கள் பெற்றோர்களிடம் சென்று கேட்கத் தேவையில்லை. இது மாதிரியான பொருட்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்கக்கூடிய 1,000 ரூபாயில் தாராளமாக வாங்கிக்கொள்ளலாம்.

இந்தத் திட்டங்கள் வந்தபிறகு பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்வி செல்லுகின்ற வாய்ப்பு இருந்தும், பொருளாதாரச் சூழல் காரணமாக உயர்கல்வியைத் தொடர இயலாத கிட்டத்தட்ட 15 ஆயிரம் மாணவர்கள் இன்றைக்கு உயர்கல்வியில் இந்தத் திட்டத்தின் மூலம் சேர்ந்திருக்கிறார்கள்.

அதுமட்டும் இல்லை, மாணவர்களை வேலைவாய்ப்பிற்குத் தயார்படுத்துகின்ற வகையில் நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. படிப்புடன் வேலைகளுக்கான அந்தத் திறனையும்

நான் முதல்வன் திட்டம் வழங்கிக்கொண்டு வருகின்றது.

குறிப்பாக, வேலை தேடுகின்ற நிலையைத்தாண்டி மற்றவர்களுக்கும் வேலை கொடுக்கலாம் என்ற தன்னம்பிக்கையை நம்முடைய நான் முதல்வன் திட்டம் தொடர்ந்து வழங்கி வருகின்றது. கல்விக்கு மட்டுமின்றி, இன்றைக்கு உடற்கல்விக்கும், விளையாட்டுக்கும் நம்முடைய அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்கள்.

இந்த நிகழ்ச்சியினுடைய பெயரே கல்வியில் சிறந்த தமிழ்நாடு, கல்விக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல், எங்களுடைய விளையாட்டு வீரர்களுக்கும் இந்த மேடையில் இடம் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் விளையாட்டு வீரர்களின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எப்படிப் பள்ளிக் கல்வி முக்கியமோ, எப்படி உயர்கல்வி முக்கியமோ, அதேபோல் உடற்கல்வியும் முக்கியம் என்று இந்த நிகழ்ச்சியின் மூலமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிய வைத்திருக்கிறார்கள்.

Our Chief Minister believes that, financial constraints should not be a barrier for our athletes. Therefore, he launched Tamil Nadu Champions Foundation in 2023. It is the first-of-its-kind initiative in a India. Our Honourable Chief Minister has personally contributed 5 lakh rupees, as the very first supporter to the Tamil Nadu Champions Foundation. I am proud to say he was the first contributor for this foundation..

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக இன்றைக்கு ஆயிரக்கணக்கான வீரர்களுக்குச் சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பிலான நிதி உதவியையும், விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி இருக்கின்றோம்.

To encourage our youth in sports, our Hon'ble Chief Minister, provided jobs to more than 100 athletes last year in government and public sector undertakings through the 3% reservation for sportspersons. We are also giving equal importance to para-athletes. We have already established six para-arenas across the state and five more will be set up soon. Our Chief Minister has been awarding high cash incentives to para-athletes on-par with other players. This year, our government

is committed to provide government jobs to 25 more para- athletes.

விளையாட்டுக்கு நம்முடைய அரசு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்று விளையாட்டு வீரர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் இங்கே பகிர்ந்து கொண்டார்கள்.

குறிப்பாக, இங்கே நான் சொல்லவேண்டும் என்றால், மாற்றுத்திறனாளி தம்பி மனோஜ் அவர்கள் கூறிய கருத்துக்கள் மிகுந்த நெகிழ்ச்சியாகவும், எனக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. தம்பி மனோஜ் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, TANSI-யில் ஒரு contract worker-ஆக வேலை செய்து கொண்டு இருந்தார். அவருடைய திறமையைக் கண்டுபிடித்து, சில ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க நிதி உதவி அளித்தோம். அவர் வெளிநாடுகளில் நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கங்களோடு நம்முடைய தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருந்தார்.

அதுமட்டுமல்ல, அவருக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீட்டின்கீழ், அரசு வேலையையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

தம்பி மனோஜுக்கு அவர் சொன்னது போல் சென்ற ஆண்டு திருமணம் ஆனது. தன்னுடைய திருமணத்திற்கு என்னை அழைத்திருந்தார். நானும் மதுரைக்குச் சென்று அவருடைய திருமண விழாவில் என்னுடைய குடும்ப விழாவைப்போல் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டேன்.

இங்கு எல்லாவற்றையும் கூறினார். ஒன்றைமட்டும் விட்டுவிட்டார். விரைவில் திரு. மனோஜ் அவர்கள் ஒரு தந்தையாகப் போகிறார் என்ற அந்த செய்தியையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த இரண்டு நாட்களாக விருதுநகர், மதுரையில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், கட்சி நிகழ்ச்சிகளில் எல்லாம் கலந்து கொண்டு நேற்று நள்ளிரவு மதுரையிலிருந்து விமானம் மூலமாகச் சென்னைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் நான் கவனித்தேன். என்னோடு இரண்டு சீட்டு தள்ளிதான் தம்பி மனோஜ் அவர்களும் உட்கார்ந்து இருந்தார்.

அப்போது கேட்டேன், எங்கே சென்னைக்கா என்று, ஆமாம் அண்ணே நானும் சென்னைக்குத்தான் வருகிறேன். நாளைக்கு நேரு ஸ்டேடியத்தில் நடக்கப்போகின்ற நிகழ்ச்சியில் நானும் கலந்துகொள்ளப் போகின்றேன். பேசப் போகின்றேன் என்று சொன்னார். எனக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. திறமை இருந்தால் போதும், திறமையானவர்களின் வாழ்கையை மாற்றிக் காட்ட நம்முடைய அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதற்குத் தம்பி மனோஜ் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இந்த விழாவுக்கு நிறைய ஆசிரியர்களும், மாணவர்களும் வந்து இருக்கிறீர்கள். நான் அடிக்கடி ஆசிரியர்களிடம் வைக்கக்கூடிய ஒரே கோரிக்கை இது மட்டும்தான். Maths, Science Teachers, எங்களுடைய P.E.T பீரியடைக் கடன் வாங்கி பாடம் நடத்துவதை அறவே தவிர்த்திட வேண்டும் என்று ஒரு விளையாட்டுத் துறை அமைச்சராக, விளையாட்டு வீரர்கள் சார்பாக, மாணவர்கள் சார்பாக மீண்டும் என்னுடைய கோரிக்கையை நான் வைக்கின்றேன்.

இந்த நேரத்தில் ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்லி நிறைவு செய்ய விரும்புகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள், அண்ணா சொன்ன வார்த்தை, நான் முதலமைச்சர் ஆகிய பிறகு மூன்று காரியங்களைத் தமிழ்நாட்டுக்காக, தமிழ் மக்களுக்காகச் செய்திருக்கின்றேன்.

தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியிருக்கின்றேன். தமிழ்நாட்டில் இந்திக்கு இடம் இல்லை, இரு மொழிக்கொள்கை மட்டும் தான் என்று சட்டம் இயற்றி இருக்கின்றேன். சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட

அங்கீகாரத்தை வழங்கி இருக்கின்றேன். இந்த மூன்று விஷயத்தை நான் தமிழ்நாட்டிற்காகச் செய்திருக்கிறேன். எனக்குப் பிறகு ஆட்சிக்கு வரக்கூடியவர்கள் இந்த மூன்றையும் மாற்ற நினைத்தால், அவர்களுடைய மனதில் ஒரு பயம் வரும் ஒரு அச்சம் வரும். அந்த அச்சம் வரும்போதெல்லாம், இதையெல்லாம் மாற்றிவிட்டால் மக்கள் நம்மை என்ன செய்வார்கள் அந்தப் பயம் வரும். அந்த அச்சம் எதிரிகளை எவ்வளவு நாளைக்கு ஆட்டுகிறதோ அதுவரைக்கும் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் இந்த அண்ணாதுரைதான் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அதையே நான் இப்போது கொஞ்சம் மாற்றிச் சொல்ல விரும்புகின்றேன். காலை உணவுத்திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு வழங்கி இருக்கின்றது.

இந்தத் திட்டங்களை எல்லாம் யாராவது ஒரு நாள் என்றைக்காவது மாற்றிவிடலாம் என்று நினைத்தால் கூட அவர்களுடைய மனதிலும் நிச்சயம் பயம் வரும். அந்தப் பயம் இருக்கின்றவரைக்கும் இந்தத் தமிழ்நாட்டை ஆளுகிறவர், நம்முடைய முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் என்று பொருள்.

இன்றைக்குத் தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டங்கள் மூலம் இந்தக் கல்வி ஆண்டிற்கான ஊக்கத் தொகை பெற்றுள்ள அத்தனை மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை இன்னும் பல உயரங்களுக்கு எடுத்துச் சென்று, நம்முடைய மாநிலத்தினுடைய பெருமையையும், இந்திய ஒன்றியத்துடைய பெருமையையும் உலகிற்குப் பறை சாற்றுவோம் என்று கூறிக் கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்! ■

படமும்/ செய்தியும்

அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியில் பயின்ற 1,231 கிராம சுகாதார செவிலியர்களுக்குப் பணி நியமன ஆணைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.09.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியில் பயின்றவர்களுக்கு, 1,231 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.

இடைநிற்றல் இன்றிக் கல்வியைத் தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் “அன்புக் கரங்கள்” திட்டம்

ஏற்றமிகு தமிழ்நாட்டை உருவாக்கிட, குழந்தைகளின் கல்விக்கும் அவர்களின் சீரான வளர்ச்சிக்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றது.

மிகவும் வறுமையில் வாழும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் “தாயுமானவர்“ திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்துத் தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், “அன்புக்கரங்கள்” திட்டம் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றிக் கல்வியைத் தொடர, மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்குவதுடன், பள்ளிப்படிப்பு முடித்த பின்னர் கல்லூரிக் கல்வியும், உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்க வழிவகை செய்யும் இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.09.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு உதவித் தொகையினை வழங்கினார்.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள்
> 15.09.2025 அன்று அன்புக் கரங்கள்
> திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

மேலும், பெற்றோர் இருவரையும் இழந்து 12-ஆம் வகுப்பு முடித்து, பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு அரசின் முயற்சியால் சேர்க்கப்பட்டுள்ள மாணவ / மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இனிமேல், நீங்கள் கவலைப்பட வேண்டாம்! உங்களை இன்னும் கவனித்துக் கொள்ளத்தான் இந்த அன்புக் கரங்கள் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம். நான் இருக்கிறேன்... உங்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வேன்!

இன்றைக்கு மிகவும் முக்கியமான நாள்! பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள்! நம்முடைய தாய் நிலத்துக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய தமிழ்த்தாயின் தலைமகன் அவருடைய பிறந்த நாள்! "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று திராவிட மாடல் ஆட்சிக்கு இலக்கணம் எழுதிய மாபெரும் தலைவரின் பிறந்தநாள்!

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, இங்கு பேசிய குழந்தைகளின் சிரிப்பு தான் அண்ணா அவர்களுக்கு நாங்கள் செலுத்துகின்ற மரியாதை. மிகுந்த மனநிறைவையும், மகிழ்ச்சியையும் அடைந்து கொண்டிருக்கிறேன்!

திராவிட மாடல் என்றால் 'எல்லோருக்கும் எல்லாம்' என்று எளிமையாக விளக்கம் சொல்லிவிடலாம். ஆனால், எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பது உழைப்பதும், பாடுபடுவதும் எளிதானது அல்ல!

இந்தியச் சமூகச் சூழலில், இவர்களுக்கெல்லாம் எதுவுமே தெரியாது - தெரியக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களின் எழுச்சிதான், திராவிட இயக்கம்! அதனால்தான், மக்களோடு மக்களாக, மக்களுடைய குரலாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது!

மக்களுடைய தேவைகளை, இந்தச் சமூகத்துக்குத் தேவையான மாற்றங்களை, ஆட்சிப் பொறுப்பைப் பயன்படுத்தி இன்றைக்கு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்! அரசியல் என்பது மக்கள் பணி! அது கடுமையான பணி! எங்களைப் பொறுத்தவரைக்கும், இங்கே சொகுசுக்கு இடமில்லை!

நீங்களே பார்த்துக் கொண்டிருப்பீர்கள். காலையில் ஒரு இடத்தில் மக்கள்கூட பேசிக் கொண்டிருப்பேன். ஈவினிங் பல நூறு கிலோமீட்டர்

கடந்து இன்னொரு ஊரில்... இன்னொரு பகுதியில் மக்கள்கூட இருப்பேன். இந்த உழைப்பைத்தான், தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர், எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி எப்போதும் மக்களோடு மக்களாக இருக்கின்ற காரணத்தால்தான், கடைக்கோடி மனிதருக்கும் என்ன தேவை என்று பார்த்துப் பார்த்து எங்களால் செய்ய முடிகிறது!

அரசியல் என்றால் பலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஏதோ, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம்; பொறுப்பை மறந்து பதவி மோகத்தில் இருந்தோம்; சில கவர்ச்சித் திட்டங்களைச் செய்தோம்; மறுபடியும் பதவி மோகத்தோடு தேர்தலுக்குத் தயாராவோம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், எங்களுடைய அடிப்படையே, "பதவி அல்ல; பொறுப்பு" தான்! அதிகாரம் என்பது சாமானியனுக்காகப் போராடுவது!

தாயுமானவர் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த அன்புக்கரங்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம். இதனால், 6,082 குழந்தைகளுக்கு, மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் வழங்கப் போகிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காகச் செய்வதா?

காலையில் பள்ளிக்குப் பசியுடன் வருகிற குழந்தையின் வேதனையைப் பார்த்தேன். காலை உணவுத் திட்டத்தை உருவாக்கினேன். இன்றைக்கு, 21 இலட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் சூடாக, சுவையாகச் சத்தான உணவைப் பரிமாறுகிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காகச் செய்வதா?

சமூகத்தின் விளிம்பு நிலையில், எண்ணிக்கையில் சில நூறு - சில ஆயிரம் மட்டுமே இருக்கின்ற மாற்றுத்திறனாளிகள் – திருநர்கள் ஆகியோருக்கும் பார்த்துப் பார்த்து திட்டங்களைச் செயல்படுத்துகிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காகச் செய்வதா?

இன்னும் சொல்கிறேன்... நம்முடைய திராவிட மாடல் அரசு, என்ன மாதிரியான நெருக்கடியில்

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது என்று உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

கொரோனா பெருந்தொற்று உச்சத்தில் இருந்த காலக்கட்டம் அது! ஏராளமான உயிர்கள் பறிபோனது. பலருடைய தொழில்கள் எல்லாம் முடங்கிப் போனது. பல குடும்பங்கள் தங்களுடைய முதுகெலும்பை இழந்து, பலவீனப்பட்டது. உடனே, இந்தியாவுக்கே முன்மாதிரி அரசாக, கொரோனாவால் பெற்றோரை இழந்த 15 ஆயிரத்து 775 குழந்தைகளுக்கு, 511 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கினோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காகச் செய்வதா? இல்லை.

கொரோனாவால் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு மாதந்தோறும் மூவாயிரம் ரூபாய் என்று 2021-இல் ஆயிரத்து 148 குழந்தைகள் – 2022-இல் ஆயிரத்து 112 குழந்தைகள் – 2023-இல் ஆயிரத்து 12 குழந்தைகள் என்று, மூன்று ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கினோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காகச் செய்வதா? இல்லை.

அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருக்கின்ற ஆயிரத்து நானூறு பெண் குழந்தைகளுக்கு தற்காப்பு மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் வழங்குகிறோம்.

இதென்ன, வாக்கரசியலுக்காகச் செய்வதா? இல்லை.

சிறப்புத் தத்தெடுப்பு நிறுவனங்களில் இருக்கின்ற ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வழங்க, அனைத்து சிறப்புத் தத்தெடுப்பு நிறுவனங்களையும், தாய்ப்பால் வங்கியுடன் இணைத்திருக்கிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காகச் செய்வதா? இல்லை.

இப்படி ஏராளமான திட்டங்களை, முன்னெடுப்புகளை எங்களால் பட்டியலிட்டுச் சொல்லிக் கொண்டே இருக்க முடியும்!

இதற்கும் வாக்கரசியலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? வாக்கு என்பது, மக்களின் நம்பிக்கையைப் பெற்றதற்கான அடையாளம்! அந்த நம்பிக்கையைப் பெறும், கொள்கையும், செயல்திட்டமும், உழைப்பும், எங்களிடம் இருக்கிறது!

அந்த நம்பிக்கையினால் பெறப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பு, சமூகத்தின் கடைக்கோடி மனிதரையும் கை கொடுத்து மேலே தூக்கி விடுவதற்கான வாய்ப்பு! அந்தக் கையாகத்தான்

என்னுடைய கை இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்! அப்படித்தான், இருந்து கொண்டிருக்கிறது! பெற்றோர் வேலைக்குச் செல்கிறார்கள் என்று, குழந்தைகளுக்குக் காலை உணவு வழங்குகிறோம்.

பெற்றோரே இல்லாத குழந்தைகளை, சிங்கிள் பேரண்ட் இருக்கின்ற குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம் வந்தது. அந்த அடிப்படையில் உருவானதுதான், இந்த அன்புக்கரங்கள் திட்டம்!

இந்தத் திட்டத்திற்காக, மாவட்ட ஆட்சியர்களிடம் சொல்லி, பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொருவரால் கைவிடப்பட்ட குழந்தைகள் – பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் மாற்றுத்திறனாளியாக இருப்பவரின் குழந்தைகள் – பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால், அவர்களுடைய குழந்தைகள் – பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றால், அவர்களுடைய குழந்தைகள் என்று கணக்கெடுக்கச் சொன்னோம்.

அப்படி முதற்கட்டமாகக் கண்டறியப்பட்ட 6,082 குழந்தைகளுக்கும், பள்ளிப் படிப்பை முடிக்கின்ற வரைக்கும் இனிமேல் மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் உங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைத்திடுவோம்!

உங்களுக்கு 18 வயது ஆகின்ற வரைக்கும், நீங்கள் கல்வியைத் தொடர இந்த உதவித்தொகை வழங்கப்படும்! நீங்கள் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, கல்லூரிக் கல்வியும், உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

நீங்கள் எல்லோரும் படித்து முன்னேறி வரவேண்டும்! இதுதான் என்னுடைய விருப்பம்; எங்களுடைய இலட்சியம்! இந்த இலட்சியத்துக்கு துணையாகும் நம்முடைய திராவிட மாடல் அரசின் கரம்தான், அன்புக்கரம்!

நாளைக்கு நீங்கள் படித்து, டாக்டராக – என்ஜினியராக–சயிண்டிஸ்டாக–ஐ.ஏ.எஸ்,ஐ.பி.எஸ் அதிகாரியாக – அரசியல்வாதியாக உயர்ந்து, இந்தச் சமூகத்துக்கு, இந்த மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்!

உங்களுடைய வெற்றி, தமிழ்நாட்டின் ஹிஸ்ட்டரியைச் சொல்லவேண்டும்! அதற்கு உங்களுக்கு சப்போர்ட்டாக, உங்கள் ஃபிரண்டாக, உங்கள் பேரண்ட்டாக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்! இருப்பேன்!

நன்றி! வணக்கம்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.09.2025 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-ஆவது பிறந்தநாளை முன்னிட்டுச் சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் கலந்துகொண்டார்.

ஜெர்மனியில்
26 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ரூ.7,020 கோடி முதலீடுகளை ஈர்த்து 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கம்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான TN Rising Europe முதலீட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாக ஜெர்மனியில் நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3819 கோடி மதிப்பிலான 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இந்த ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டில் 9,070 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இதன்மூலம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வருகையால் ஜெர்மனியில் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கையெழுத்திடப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ.7,020 கோடியாக உயர்ந்து, 15,320 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இதில் நார்-பிரெம்ஸ் (ரூ.2000 கோடி முதலீடு, 3,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), நோர்டெக்ஸ் குழுமம் (ரூ.1,000 கோடி முதலீடு, 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), ஈபிஎம்-பாப்ஸ்ட் (ரூ.201 கோடி முதலீடு, 250 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) ஆகிய முன்னர் கையெழுத்திடப்பட்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களும் அடங்கும்.

முக்கியமாக, தமிழ்நாட்டில் ஏற்கனவே செயல்பட்டு வரும் பல நிறுவனங்கள் மீண்டும் முதலீடுகள் செய்து விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ள முன்வந்துள்ளன. இது தமிழ்நாட்டின் ஒப்பற்ற தொழில்துறைச் சுற்றுச்சூழல் அமைப்பு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத் திறன் மீதான தங்கள் நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாகனக் கூறுகள், தொழில்துறை உபகரணங்கள், மேம்பட்ட ஆராய்ச்சி, மேம்பாடு ஆகியவற்றில் உலகளாவிய தலைவர்களை இந்த மாநாடு ஒன்றிணைத்தது. முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களாக வென்சிஸ் எனர்ஜி (ரூ.1,068 கோடி முதலீடு, 5,238 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பிஏஎஸ்எஃப் (ரூ.300 கோடி முதலீடு, 100 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள்), பெல்லா பிரீமியர் ஹேப்பி ஹைஜீன் (ரூ.300 கோடி முதலீடு, 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), ஹெர்ரென்க்னெக்ட் இந்தியா (ரூ.250 கோடி முதலீடு, 400 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பல்ஸ் (ரூ.200 கோடி முதலீடு, 500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), விட்சென்மேன் இந்தியா (ரூ.200 கோடி முதலீடு, 450 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), மாஷ் எனர்ஜி (ரூ.200 கோடி முதலீடு, 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) ஆகியவை அடங்கும்.

சுகாதாரம், மருத்துவத் தயாரிப்புகளில் பெல்லா பிராண்டை தொடர்ந்து போலந்தைத் தளமாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனமான பெல்லா ஹைஜீன், திண்டுக்கல் மாவட்டத்தில் அதன் நவீன சுகாதாரப் பொருட்கள் உற்பத்தி வசதியை விரிவுபடுத்துகிறது.

ஆட்டோமொபைல் துறைக்கான நெகிழ்வான உலோகக் குழல்கள், விரிவாக்க இணைப்பான்களில் முன்னணியில் உள்ள ஜெர்மன் நிறுவனமான விட்சென்மேன் குழுமம், தமிழ்நாட்டில் ஆட்டோமொடிவ், தொழில்துறை பயன்பாடுகளுக்கான உற்பத்தியை விரிவுபடுத்துகிறது.

பிஏஎஸ்எஃப் சுற்றுச்சூழல் கேட்டலிஸ்ட், மெட்டல் சொல்யூஷன்ஸ் (ECMS) அதன் செங்கல்பட்டு உற்பத்தி ஆலையை விரிவுபடுத்துகிறது. இந்த நிறுவனம் வினையூக்கிகள், உறிஞ்சிகள், பேட்டரி பொருட்கள், விலைமதிப்பற்ற உலோகத் தீர்வுகளில் சேவைகளை அளித்து வருகிறது.

கியர் இல்லாத நேரடி இயக்கித் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற ஜெர்மன் காற்றாலை உற்பத்தியாளரான வென்சிஸ் எனர்ஜி ஏஜி, தமிழ்நாட்டில் காற்றாலைப் பாகங்கள் உற்பத்தி ஆலையை அமைக்கிறது.

சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்களில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹெர்ரென்க்னெக்ட், அதன் சென்னை ஆலையை விரிவுபடுத்துகிறது. மும்பை கடற்கரை சாலை, சென்னை மெட்ரோ போன்ற திட்டங்களை இந்நிறுவனம் அதன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பாகங்கள் மூலம் செயல்படுத்தும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் BMW குழுமத்தின் மூத்த தலைவர்களுடன் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடினார். அப்போது ஆட்டோமொடிவ், மின்சார வாகன உற்பத்தியில் தமிழ்நாட்டின் சிறப்பினை எடுத்துரைத்து, BMW நிறுவனம் அதன் செயல்பாட்டைத் தமிழ்நாட்டில் அதிகப்படுத்திட அழைப்பு விடுத்தார். இச்சந்திப்பின்போது, BMW குழும நிறுவனத்தின் மூத்த தலைவர்கள், தமிழ்நாட்டின் வலுவான மின்சார வாகன உட்கட்டமைப்பை மேற்கோள் காட்டியது, மாநிலத்தின் மீதான அந்நிறுவனத்தின் ஆர்வத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.

ஜெர்மனியின் இரட்டைத் தொழில் பயிற்சி மாதிரியைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்காக நெக்ஸ்ட் மிட்டல்ஸ்டாண்ட் (ஆஸ்பில்டங்) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 120 மாணவர்களுடன் தொடங்கி அடுத்த பத்தாண்டுகளில் 20,000 ஆக அதிகரிக்கும் இந்தத் திட்டம், தமிழ்நாட்டு இளைஞர்களிடையே உலகளாவிய திறன் தரத்தை உயர்த்தும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.

என்னுடைய முதல் ஜெர்மனி பயணத்தில் அதுவும் இந்தியா என்ற மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் இருக்கின்ற தமிழ்நாடு மாநிலத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராக, இந்த முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்பதைப் பெருமையாக நான் நினைக்கிறேன்; பெருமகிழ்ச்சியோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்!

உலகின் முன்னணித் தொழில் வல்லரசுகளில் ஒன்றாகவும், நவீன உற்பத்தி, துல்லிய பொறியியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மோட்டார் வாகனத் தொழில்நுட்பம் ஆகியவற்றில் வலிமையோடு, ஐரோப்பாவின் முதுகெலும்பாக இருக்கின்ற ஜெர்மனிக்கு, முதலீடுகளை ஈர்ப்பதற்காக வந்திருக்கக்கூடிய இந்த நேரத்தை நான் பெருமையாக நினைக்கிறேன்!

தமிழ்நாட்டைப் பற்றி உங்களுக்கெல்லாம் நான் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரம்! இந்தியாவிலேயே அதிகமான டபுள் டிஜிட் பொருளாதார வளர்ச்சியையும், உற்பத்தித்துறை வளர்ச்சியையும் அடைந்திருக்கின்ற ஒரே மாநிலம்! இந்தியாவிலேயே அதிகப்படியாக, 48 விழுக்காடு நகர்மயமான மாநிலம்! அதிகளவிலான தொழிற்சாலைகளும், பணியாளர்களும் இருக்கக்கூடிய மாநிலம்! சீகன்பால்கு என்கின்ற ஜெர்மானியர் 18-ஆம் நூற்றாண்டிலேயே, தமிழ்நாட்டிற்கு வந்து, தமிழைக் கற்று, இந்தியாவிலேயே முதன்முதலாக பைபிளை தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கிறார். தமிழின் பெருமையை அவர் சொல்லியிருக்கிறார்.

ஜெர்மனி போலவே தமிழ்நாட்டுக்கு என்று பெரிய வரலாறும், பாரம்பரியமும் இருக்கிறது. தமிழும், ஜெர்மனும் உலகின் பழமையான மொழிகளில் முக்கியமானவை. தமிழுக்கு என்று மிகப்பெரிய இலக்கியத் தொன்மையும், மரபும் இருக்கிறது. ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு தமிழ் நிலத்தில் இருந்ததற்கான ஆய்வறிக்கைகள் இருக்கின்றன! இப்படிப்பட்ட மாநிலத்தில் தொழில் தொடங்க உங்களை எல்லாம் நான் அழைக்கிறேன்.

ஜெர்மனி மீது எனக்கு என்ன ஈர்ப்பு என்றால், உங்களுடைய பண்பாடு, தொழில் நுணுக்கம், புத்தாக்க வலிமை போன்றவை வியப்பை ஏற்படுத்துகிறது. உங்களுடைய கலையுணர்வை, ஒவ்வொரு கட்டடத்திலும், தெருக்களிலும் பார்த்து நான் ரசிக்கிறேன். பியூட்டிபுல் லேண்ட்ஸ்கேப், வைப்ரண்ட் கல்ச்சர் இதுதான் ஜெர்மனி!

எங்கள் தமிழ்நாட்டிலும் பல ஜெர்மனி நிறுவனங்கள் தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். BMW, Daimler Mercedes-Benz, Telekom போன்ற பல்வேறு ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஜெர்மனிதான், இந்தியாவின் வணிக உறவு மேற்கொள்ளும் ஐரோப்பிய நாடுகளில் முதன்மையான நாடு! "Made in Germany"-யை எப்படி தரத்தின் அடையாளமாக உலகம் முழுவதும் பார்க்கிறார்களோ, அப்படி, "Made in Tamil Nadu" என்பதும் தரமும், திறனும் கொண்ட ஒரு பெயராக உருவாகிக் கொண்டிருக்கிறது. Bicycle முதல்

Battle Tanks வரை நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

ஜெர்மனிக்கும், தமிழ்நாட்டுக்கும் இடையில் பொருளாதாரத்தில் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. ஜெர்மனி எப்படி ஐரோப்பிய யூனியனின் முக்கியத் தொழில்துறை நாடோ, அதேபோல, இந்திய ஒன்றியத்தில் தொழில்துறையின் இதயத்துடிப்பாகத் தமிழ்நாடு மாநிலம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் சொன்னால், தமிழ்நாடுதான் இந்தியாவின் ஜெர்மனி! முன்னணி உயர்கல்வி நிறுவனங்கள், முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்கள், கிட்டத்தட்ட 54 இலட்சம் M.S.M.E. நிறுவனங்கள், கிட்டத்தட்ட 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் என்று இருக்கின்ற தமிழ்நாட்டுக்கும், ஜெர்மனிக்கும் இடையே உள்ள பொருளாதார உறவு மூலமாக, இந்த நிலையை நாம் இன்னும் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

மோட்டார் வாகனத் துறையில் – டெயிம்லர் மற்றும் BMW, எலக்ட்ரிக்கல் உற்பத்தித் துறையில் – ஸ்நெய்டர், காற்றாலைத் துறையில் – ZF மற்றும் சீமன்ஸ், தகவல் தொழில்நுட்பத் துறையில் பாஷ் போன்ற அறுபதுக்கும் மேற்பட்ட ஜெர்மன் நிறுவனங்கள் தங்களுடைய நிறுவனங்களை நிறுவ தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தப் பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்தும் விதமாக, நீங்கள் எல்லோரும் தமிழ்நாட்டில் முதலீடு செய்யவேண்டும் என்று கேட்க வந்திருக்கிறேன்.

இதற்கு முன்னால், யுனைட்டட் அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், அமெரிக்கா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்த்திருக்கிறேன். பல்வேறு முதலீட்டு மாநாடுகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நடத்தி முதலீடுகளை ஈர்த்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற குளோபல் இன்வெஸ்டர்ஸ் மீட்டில், ஜெர்மனி பார்ட்னராக இணைந்து பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட கடுமையான முயற்சிகளால், மிகப்பெரும் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய முதலீடுகளை பன்மடங்கு அதிகரித்திருக்கிறார்கள். ஜெர்மனி

நிறுவனங்கள் உட்பட 130-க்கும் மேற்பட்ட 'ஃபார்ச்சூன் 500' நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்களுடைய திட்டங்களை நிறுவியிருக்கிறதே, தமிழ்நாட்டில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் நிலவுவதற்குச் சான்றாக இருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், மோட்டார் வாகனங்கள், குறிப்பாக மின் வாகனங்கள், மின்னணுக் கருவிகள், தோல் பொருள்கள், தோல் அல்லாத காலணிகள், ஆடைகள் போன்றவற்றின் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும், தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உயர் மருத்துவச் சேவைகள் போன்ற பல்வேறு துறைகளிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

எனவே, உலகளவில் நீங்கள் சிறந்து விளங்கும் ரோபோடிக்ஸ், மூலதனப் பொருட்கள், புத்தாக்கம் போன்ற துறைகளில் இருந்தும், உங்களுடைய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜெர்மனி முதலீட்டாளர்களை அன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சிக்கான திறன் பயிற்சி முறையில், உலகளவில் சிறந்த எடுத்துக்காட்டாக ஜெர்மனி திகழ்கிறது. திறன் மேம்பாட்டில் நாங்களும் சிறப்புக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். உலகத்தரச் சான்று பெற்ற திறன் மேம்பாட்டு மையங்களை, தொழிலகங்களுடன் இணைந்து அமைத்து, இளைஞர்களை உலக அளவுக்கு தகுதியானவர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். உங்களுடையபயிற்சிநுணுக்கங்களும், நுட்பங்களும் எங்களுக்குப் பெரிதும் ஊக்கமளிக்கிறது.

நான் இங்கே முக்கியமாகச் சொல்ல விரும்புவது, நான் இங்கே வெறும் முதலீட்டுக்காக மட்டும் வரவில்லை. ஜெர்மனி - தமிழ்நாடு ஆகிய இரண்டு பொருளாதாரங்களுக்கு இடையே ஒரு பாலம் அமைக்க வந்திருக்கிறேன். தொழில் மற்றும் தொழில்நுட்பத்தில், ஜெர்மனியின் துல்லியத்தையும், தமிழ்நாட்டின் ஆற்றலையும் இணைத்தால், உலகளவில் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையையும், ஐரோப்பா மற்றும் ஆசியா இடையே ஒரு வலுவான வர்த்தகப் பாலத்தையும் நம்மால் உருவாக்க முடியும்.

வணிகம் செய்வதை எளிதாக்கும் தரவரிசையில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இருக்கிறது. முதலீட்டாளர்கள் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு அனைத்து வசதிகளையும்,

எங்களுடைய திராவிட மாடல் அரசு உறுதியாக வழங்கிக் கொண்டு வருவதால், முதலீடுகளுக்கு மிகச் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில், தொழில்களைத் துவங்க வரும் முதலீட்டாளர்களுக்கு, அனைத்து உதவிகளையும் செய்வதற்குத் தமிழ்நாடு அரசு காத்திருக்கிறது. தமிழ்நாட்டிற்கு வரும்போது, நீங்கள், உங்கள் பிசினசுக்கான மார்க்கெட்டாக மட்டும் பார்க்க மாட்டீர்கள்; உங்களுடன் இருந்து, உங்களுடைய வெற்றியைக் கொண்டாடுகின்ற பார்ட்னர்ஸை நீங்கள் பார்ப்பீர்கள். பல்வேறு தொழில்களை மேற்கொள்ள உகந்த சூழலையும், திறன்மிக்க மனித வளத்தையும் உறுதி செய்வதுடன், பல்வேறு தொழில் கொள்கைகளின்கீழ் உயர் சலுகைகளையும் அளிக்க இருக்கிறோம். எனவே, உங்களுடைய முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டும் என்று மீண்டும் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

தந்தைப் பெரியார் அவர்களின் பிறந்தநாள்

படமும் / செய்தியும்

தந்தைப் பெரியார் அவர்களின் 147-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 17.09.2025 அன்று சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ஜெர்மனி நாட்டின் மூன்று நிறுவனங்களுடன்
ரூ.3,201 கோடி முதலீட்டில் சுமார் 6,250 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற இலக்கினை அடைந்திடவும் , அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் பல்வேறு முன்னெடுப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டிற்குத் தொழில் முதலீடுகளை ஈர்த்திட அரசு முறைப் பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.08.2025 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

ஜெர்மனி நாட்டின் டசெல்டோர்ஃப் சர்வதேச விமான நிலையம் சென்றடைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வட ரைன்-வெஸ்ட்பாலியா (NRW) மாகாணத்தின் முதலமைச்சர் திரு. ஹென்ட்ரிக் வூஸ்ட் சார்பாக, அவருடைய அரசின் தூதரக விவகாரங்கள், அரசுமுறை வரவேற்புப் பிரிவின் திருமதி அன்யா டி வூஸ்ட், இந்தியத் தூதரகத்தின் பொறுப்பாளர் திரு. அபிஷேக் துபே உள்ளிட்ட அலுவலர்கள் அன்புடன் வரவேற்றனர். மேலும், ஜெர்மனி வாழ் தமிழர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.08.2025 அன்று ஜெர்மனி நாட்டின் கொலோன் நகரில் (Cologne) நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு – ஜெர்மனி வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அதன் தொடர்ச்சியாக, 01.09.2025 அன்று டசெல்டோர்ஃப் நகரில் Knorr Bremse, Nordex குழுமம், ebm-papst ஆகிய நிறுவனங்களுடன் 3,201 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 6,250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், BMW குழும நிறுவன உயர் அலுவலர்களுடன் தமிழ்நாட்டில் அந்நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

Knorr Bremse நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஜெர்மனி நாட்டின், முனிச் நகரை தலைமையகமாகக் கொண்ட நார் -பிரெம்ஸ் (Knorr Bremse) நிறுவனம், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சென்னையில் 2,000 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 3,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், ரயில்வே கதவுகள், பிரேக்கிங் அமைப்புகளுக்கான அதிநவீன வசதியை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் ரயில்வே கூறுகள், மேம்பட்ட பொறியியல் சுற்றுச்சூழல் அமைப்பை மேலும் வலுப்படுத்தும்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் Knorr Bremse நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் திரு. மார்க் லிஸ்டோசெலா (Mr. Marc Llistosella), துணைத் தலைவர் திரு. ஒலிவர் கிளக் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

Nordex குழும நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஜெர்மனி நாட்டின் ஹேம்பர்க் நகரைத் தலைமையகமாகக் கொண்ட Nordex குழும நிறுவனம், உலகின் மிகப்பெரிய காற்றாலை உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அதன் தற்போதைய ஆலையை விரிவுபடுத்தும் வகையில் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விரிவாக்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, பசுமைத் தொழில்மயமாக்கலில் தமிழ்நாட்டின் தலைமையை வலுப்படுத்துகிறது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், Nordex குழுமத்தின் முதன்மை செயல்பாட்டு அலுவலர் திரு. லூயிஸ் ஆல்பர்டோ பெர்ணான்டஸ் ரோமேரோ, இந்தியத் தலைவர் டாக்டர் சரவணன் மாணிக்கம் ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த விரிவாக்கம் காற்றாலை உற்பத்தியின் உள்நாட்டு, சர்வதேச தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

ebm–papst நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஜெர்மனி நாட்டின் மல்ஃபிங்கன் (Mulfingen) நகரைத் தலைமையகமாகக் கொண்டுள்ள

ebm-papst நிறுவனம், மின்சார மோட்டார்கள், மற்றும் மின்விசிறிகள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாகும். இது அதன் புதுமையான, ஆற்றல் திறன் கொண்ட காற்று இயக்கத் தீர்வுகளுக்கு உலகளவில் பெயர் பெற்றது. இந்நிறுவனம் மின்னணு ரீதியாக மாற்றப்பட்ட (Electronically Commutated) மோட்டார் தொழில்நுட்பத்தை முன்னோடியாகக் கொண்டு HVAC, ஆட்டோமோட்டிவ், குளிர்பதனம், தொழில்துறை பொறியியல் போன்ற தொழில்களுக்கு சேவை ஆற்றுகிறது.

இந்நிறுவனம் சென்னையில் அதன் உலகளாவிய திறன் மையத்தை (GCC) விரிவுபடுத்தவும், தமிழ்நாட்டில் அதன் உற்பத்தியை அடுத்த 5 ஆண்டுகளில் 201 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவுபடுத்தவும், சுமார் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ebm-papst நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. அதுல் திரிபாதி அவர்கள் கையெழுத்திட்டார்.

BMW குழும நிறுவன உயர் அலுவலர்களுடன் சந்திப்பு

ஜெர்மனி நாட்டின், முனிச் நகரைத் தலைமையகமாகக் கொண்டுள்ள BMW குழும நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டத்தில் வாகனங்களுக்கான ஆட்டோமோட் அசல் உபகரணங்கள் உற்பத்தி ஆலையை நிறுவியுள்ளது. தமிழ்நாட்டில் ஆட்டோமோட் துறையில், குறிப்பாக மின்சார வாகனப் பிரிவில் அந்நிறுவனத்தின் எதிர்கால விரிவாக்கத்திற்கான வாய்ப்புகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், BMW குழும நிறுவனத்தின் அரசு விவகாரங்களுக்கான உலகளாவிய தலைமை அலுவலர் திரு. தாமஸ் பெக்கர், BMW இந்திய நிறுவனத்திற்கான அரசு, வெளியுறவு இயக்குநர் திரு. வினோத் பாண்டே ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். ●

சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பிறந்தநாள்

படமும் / செய்தியும்

சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 11.09.2025 அன்று சென்னை கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள, அன்னாரது திருவுருவச் சிலை, திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இங்கிலாந்தில் இந்துஜா குழுமத்துடன் ரூ.7,500 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான TN RISING ஐரோப்பா முதலீட்டுச் சந்திப்புகளின் போது, இலண்டனில் இங்கிலாந்தைத் தலைமையிடமாகக் கொண்ட இந்துஜா குழுமம், மின்சார வாகனங்களுக்கான செல், பேட்டரி உற்பத்தி, BESS (பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்பு) மற்றும் மின்சார சார்ஜிங் நிலையங்களுக்கான வணிகங்களில் 7,500 கோடி ரூபாய் முதலீடு செய்ய தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் மின்சார வாகனச் சுற்றுச்சூழல் அமைப்பை விரிவுபடுத்தி 1,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மேலும், அஸ்ட்ராஜெனெகா நிறுவனம் (AstraZeneca) இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மூன்றாவது தொழில் முதலீட்டை அறிவித்துள்ளது. சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு, தொழில்நுட்ப மையத்தை (GITC) 176 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்திடவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

இதன்மூலம், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து, ஜெர்மனி நாடுகளுக்கான பயணத்தால் தமிழ்நாடு பெற்ற மொத்த முதலீடு 15,516 கோடி ரூபாயாகும். இதன்மூலம் 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தைத் தலைமையிடமாகக் கொண்ட இந்துஜா குழுமத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் மிக முக்கியமான முன்னெடுப்பாகும். இந்தக் குழுமம், தமிழ்நாட்டின் மின்சார வாகனச் சுற்றுச்சூழல் அமைப்பில் அதன் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முதலீடுகளைத் திட்டமிட்டு, நிலையான இயக்கம், பேட்டரி தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய ஹாட்ஸ்பாட்களில் ஒன்றாகத் தமிழ்நாட்டை மேம்படுத்துகிறது.

அஸ்ட்ராஜெனெகாவின் GITC, அஸ்ட்ராஜெனெகாவின் உலகளாவிய செயல்பாடுகளில் முக்கியப் பங்கு வகிக்கிறது, இது அதிநவீன ஆராய்ச்சி, செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் கண்டுபிடிப்பு, மருத்துவ சேவைகள் வழங்குவதில் தொழில்நுட்ப மாற்றத்தைச் செயல்படுத்துகிறது. இந்நிறுவனம் இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அதன் மூன்றாவது முதலீட்டினைச் செய்துள்ளது. இது மாநிலத்தின் திறன் வளர்ச்சி மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நிர்வாகத்தின் மீது உள்ள வலுவான நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது.

இந்த முதலீடுகள் இங்கிலாந்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சந்திப்புகளின் போது வெளியிடப்பட்ட முந்தைய அறிவிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். இது GCC-க்கள், உற்பத்தி, ஜவுளி தொழில்நுட்பம், வடிவமைப்பு க் கல்வி போன்ற துறைகளில் 1,293 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 820 கோடி ரூபாய் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கிலாந்து நாட்டு முதலீட்டாளர்கள் சந்திப்புகளுக்கு முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான குழு ஜெர்மனியிடமிருந்து 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 7,020 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்துள்ளது. இதன்மூலம் 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவை விண்வெளி, விரிவான தொழில்நுட்பம், ரயில்வே, ஆட்டோமொடிவ், மின்னணுவியல் உள்ளிட்ட முக்கியத் துறைகளை உள்ளடக்கியது ஆகும். ■

அக்டோபர் 2: அண்ணல் காந்தியடிகள் அவர்கள் பிறந்த நாள்

"இந்தியாவின் ஆன்மா"

அகிம்சை, உண்மை, மதநல்லிணக்கம் ஆகியவற்றின் முகமாகவே திகழ்பவர் காந்தியடிகள், அவரை இந்தியாவின் ஆன்மா என்றாலும் மிகையாகாது.

காந்தியார் வாழ்ந்த காலத்தைக் காட்டிலும் தற்போதைய சூழலில்தான் அவரது தேவை மிகுதியாக உள்ளது. இந்திய மக்களைப் பிளவுபடுத்தி, அப்பிரிவினைத் தீயில் குளிர்காயும் சக்திகளை வீழ்த்தி, தேசத்தந்தை காணவிரும்பிய சகோதரத்துவ இந்தியாவை மீண்டும் மலரச் செய்து, அவருக்குக் காணிக்கை ஆக்குவோம்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
சமூக வலைத்தளப் பதிவு - 02.10.2024

பொருளாதாரத் தடையினால் உயர்கல்வியினைத் தொடர இயலாத இஸ்லாமிய மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.9.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்பு வாரியத்தின் சார்பில், பொருளாதாரத் தடையினால் உயர்கல்வியினைத் தொடர இயலாத இஸ்லாமிய மாணவ மாணவியர்கள் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பினைத் தொடர கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, இஸ்லாமிய மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையினை வழங்கினார்.

இஸ்லாமிய பெருமக்களின் நல்வாழ்விற்காக தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் சார்பில் உலமாக்களுக்கு மாதம் ரூ.3,000/- ஓய்வூதியம், உலமா ஓய்வூதியதாரர் இறப்பின் அவரது வாரிசுதாரருக்கு உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாட்டில் பணிபுரியும் மாவட்ட காஜிகளுக்கு மாதம் ரூ.20,000/- மதிப்பூதியம் வழங்கப்படுவதோடு, 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியர்களுக்கு ஒரு மாணவிக்கு ரூ.1,000/- வீதம் கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

மசூதிகள், தர்காக்கள் மற்றும் இதர வக்பு நிறுவனங்களில் பெரிய அளவிலான பழுதுபார்ப்பதற்கும் மற்றும் புனரமைப்பதற்கும் அரசு மானியம் வழங்கப்படுகிறது. இந்த நிதியாண்டு (2025-2026) தொன்மையான 10 வக்பு நிறுவனங்களைப் பழுதுபார்த்து சீரமைக்க ரூ.10 கோடி மற்றும் பெரு மராமத்து மற்றும் பழுதுபார்ப்பு மானியத்திட்டத்தின் கீழ், ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மசூதிகள் மற்றும் தர்காக்கள் போன்ற வக்பு நிறுவனங்களில் ஏற்படும் சிறிய அளவிலான பழுது மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடியில் தொகுப்பு நிதியும் வழங்கப்படுகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டில் போற்றத்தக்க திறமை இருந்தும் பொருளாதாரத் தடையினால் உயர்கல்வியினைத் தொடர இயலாத இஸ்லாமிய சிறுபான்மையின மாணவ மாணவியர்கள் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பினை தொடர ஏதுவாக தமிழ்நாடு வக்பு வாரியத்தின் சார்பில் 2000 மாணவ மாணவியருக்குத் தலா ரூ.10,000/- வீதம் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் தொடக்கமாக 10 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையினை வழங்கினார்.

“வரலாற்று நாயகர்களின் பிம்பம்”

நடிப்புக்கும் நட்புக்கும் இலக்கணமாய்த் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள், தனது நடிப்பால் மக்களின் மனக் கண்ணில் வரலாற்று நாயகர்களின் பிம்பமாய் நிலைத்துவிட்ட நடிகர் திலகத்தை நினைவு கூர்ந்து போற்றுகிறேன்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
சமூக வலைத்தளப் பதிவு - 01.10.2024

படமும் / செய்தியும்

தூய்மைப் பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளருக்குப் பாராட்டு

தூய்மைப் பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 04.09.2025 அன்று புத்தாடை மற்றும் வெகுமதி வழங்கிப் பாராட்டு தெரிவித்தார்.

படமும் / செய்தியும்

மாமேதை கார்ல்மார்க்ஸ் நினைவிடத்தில் செவ்வணக்கம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
உழைக்கும் வர்க்கத்திற்கு
ஒளி வழங்கிய சிவப்புச் சூரியனாம்
மாமேதை கார்ல்மார்க்ஸ்
நினைவிடத்தில் செவ்வணக்கம்
செலுத்தினார்.

ஜெர்மனி, கொலோன் பல்கலைக்கழக நூலகத்தைப் பார்வையிடல்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
ஜெர்மனியில் கொலோன்
பல்கலைக்கழகத்தின்
நூலகத்திற்கு சென்று
பார்வையிட்டார்.

இலண்டன், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் இல்லத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க புகைப்படத்தைப் பார்வையிட்டார்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
05.09.2025 அன்று
இலண்டனில், பாபாசாகேப்
அண்ணல் அம்பேத்கர் அவர்கள்
இலண்டன் பொருளியல் பள்ளியில்
படிக்கும்பொழுது, தங்கியிருந்த
டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த
தந்தை பெரியாரும்,
அண்ணல் அம்பேத்கரும்
உரையாடும் வரலாற்றுச்
சிறப்புமிக்க புகைப்படத்தைப்
பார்வையிட்டார்.

இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படம் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.09.2025 அன்று இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தால் ரூ.15,516 கோடி முதலீட்டில் 17,613 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்...

அனைவருக்கும் வணக்கம்.

ஒரு வாரகாலமாக ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தை நான் மேற்கொண்டேன். மன நிறைவோடு திரும்பியிருக்கிறேன். இந்தப் பயணத்தைப் பொருத்தவரை மாபெரும் வெற்றிப் பயணமாக அமைந்திருக்கிறது. மொத்தம், 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் மூலமாக, 17 ஆயிரத்து 613 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில், 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மீது நம்பிக்கை வைத்து 10 புதிய நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கு முன்வந்து இருக்கிறார்கள். உயர்கல்வி, சிறுதொழில் போன்ற துறைகளில் ஆறு அமைப்புகள் நம்முடன் இணைந்து கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கும் 17 நிறுவனங்களும், மற்ற மாநிலங்களை நோக்கிச் செல்லாமல், நம்முடைய மாநிலத்திலேயே தங்களுடையத் தொழிலை மேலும் விரிவுப்படுத்த முடிவு செய்திருக்கிறார்கள்.

நான் புறப்படுவதற்கு நான்கைந்து நாட்களுக்கு முன்பே, என்னுடைய இந்த ஒட்டுமொத்தப் பயணத்தையும் முறைப்படுத்துவதற்காக மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து அந்தப் பணியை வெற்றிகரமாக நடத்திய தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், அவருக்குத் துணையாக இருந்த அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.09.2025 அன்று, சென்னை விமான நிலையத்தில், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு திரும்பிய பின்னர் தமிழ்நாட்டிற்குப் புதிய தொழில் முதலீடுகளை ஈர்த்துள்ளது குறித்து செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி

தெரிவித்துக்கொள்கிறேன்! தொழில்துறை அமைச்சரைப் பொருத்தவரை, ஒரு துடிப்பான தொழில்துறை அமைச்சர் என்பதை ராஜா இந்தப் பயணத்தின் மூலமாக நிரூபித்துள்ளார்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் மேற்கொண்ட என்னுடைய பயணங்களுக்கு எல்லாம் முத்தாய்ப்பாக இந்தப் பயணம் அமைந்திருக்கிறது. இந்த ஃபாரின் விசிட்டில் (Foreign Visit) தான், மிக அதிக அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மிகவும் சக்சஸ்புல் (Successful) மட்டுமல்ல, மிகவும் Proud-ஆன டூராகவும் (Tour) இந்தப் பயணம் அமைந்தது என்பது உங்களுக்கே தெளிவாகத் தெரிந்திருக்கும்.

ஆமாம்!... ஆயிரம் ஆண்டு பழமையான, உலகின் முதன்மையான ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தந்தைப் பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததுதான், அந்தப் பெருமைக்குக் காரணம்! அதுமட்டுமல்ல, சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு கருத்தரங்கில் நாம் கடந்து வந்த பாதையையும், இனி அடைய வேண்டிய இலக்குகளையும் பற்றி விளக்கமாக நான் அந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கிறேன்.

அதோடு, அயலகத் தமிழர்கள் சந்திப்புக் கூட்டங்களில் பேசியது, சோயாஸ் பல்கலைக்கழக மாணவர்களிடம் திராவிட மாடல் பற்றி உரையாடியது, இலண்டனில் இருக்கும் பொதுவுடைமைத் தத்துவ மாமேதை கார்ல் மார்க்ஸ் நினைவிடம், சட்ட மாமேதை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் வாழ்ந்த இல்லம், திருவள்ளுவர் சிலை, தமிழ்க் காதலர் ஜி.யு.போப் அவர்கள் நினைவிடம் போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று பல பெருமைகளுடன் நான் வந்திருக்கிறேன்.

முதலீடுகளை ஈர்க்க சென்ற முதலமைச்சராக மட்டுமல்ல, பெரியாரின் பேரனாக, திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவராக, சுயமரியாதை உள்ள ஒரு தமிழனாக என்று இந்தப் பயணம் அனைத்து வகையிலும் எனக்கு பர்சனலாக (Personal) மறக்க முடியாத பயணமாக அமைந்திருக்கிறது.

சிலரால் இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான், “எதற்கு இந்த வெளிநாட்டுப் பயணம்? இங்கே இருக்கின்ற நிறுவனங்களைச் சந்தித்துப் பேசினால் போதாதா?” என்றெல்லாம் அறிவுப்பூர்வமாகக் கேட்பதாக நினைத்துக் கொண்டு புலம்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் நான் சொல்வது என்னவென்றால், ஜெர்மனியில் நடந்த இன்வெஸ்டர்ஸ் மீட்டில், அதிகமான ஜெர்மன் கம்பெனி வந்திருந்தார்கள். அப்போது நம்முடைய தமிழ்நாட்டைப் பற்றி எடுத்துச் சொன்னதும், பல முதலீட்டாளர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா... தமிழ்நாட்டில் இவ்வளவு பொட்டன்ஷியல் (Potential) இருக்கிறது என்று, இப்போது நீங்கள் சொன்ன பிறகுதான் தெரிகிறது. இதற்கு முன்பு வேறு ஒரு மாநிலம்தான் தங்களுடைய பொட்டன்ஷியலை (Potential) பற்றிப் பெருமையாகச் சொல்லியிருந்தார்கள். இனி, நிச்சயம் தமிழ்நாட்டை நோக்கி அதிகமான முதலீட்டாளர்கள் வருவார்கள் என்று சொன்னார்கள்.

அடுத்து ஜெர்மனியில், NRW - மினிஸ்டர் ப்ரெசிடண்ட் திரு. ஹெண்ட்ரிக் வுஸ்ட் அவர்களை சந்தித்துப் பேசினேன். அவரும் அதையேதான் சொன்னார்...

இப்படியான தொடர்புகளை ஏற்படுத்தவும், பார்ட்னர்ஷிப்பை (Partnership) உருவாக்கவும்தான் வெளிநாடுகளுக்கு முதலமைச்சரான நானே நேரில் சென்றேன். ஒரு மாநிலத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர், இன்னொரு நாட்டின் மாநிலத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரைச் சந்திக்கும்போது, பிசினஸைத் (Business) தாண்டி, இந்த உறவு வலிமையாகிறது. அதுதான் முக்கியம். அப்படித்தான், ஹெண்ட்ரிக் வுஸ்ட், இங்கிலாந்து அமைச்சர் திருமிகு. கேத்தரின் வெஸ்ட் ஆகியோருடைய சந்திப்புகளெல்லாம் இருந்தது.

அதேபோல்தான், அவர்கள் கேட்கின்ற அடுத்த கேள்விக்கான பதில் என்னவென்றால், ஏற்கனவே தமிழ்நாட்டில் நிறுவனங்கள் இருந்தாலும், அவர்கள் புதிய திட்டங்களை இங்கேதான் தொடங்க வேண்டும், விரிவுப்படுத்த வேண்டும் என்று அவசியம் இல்லை. அவர்களுடைய புதிய முதலீடுகளையும் தமிழ்நாட்டிலேயே மேற்கொள்வதை உறுதிசெய்ய வேண்டிய நிறுவன உயரதிகாரிகளைச் சந்தித்துப்

பேசும்போதுதான், அதை அவர்கள் உறுதி செய்தார்கள். அதற்காக இது போன்ற பயணங்கள் தேவைப்படுகிறது.

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு கொண்டிருக்கக்கூடிய மனித வளம், உட்கட்டமைப்பு, வெளிப்படையான அரசு நிருவாகம், சலுகைகள் பற்றி முதலமைச்சராக இருக்கக்கூடிய நானே அவர்களிடம் எடுத்துச் சொல்கிறேன். இப்போது கையெழுத்தான ஒப்பந்தங்கள் மட்டுமல்ல, இன்னும் பல முதலீடுகளும், பல நிறுவனங்களும் இந்தச் சந்திப்பினால் நிச்சயம் தமிழ்நாட்டிற்கு வரும் என்ற நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு 8-ஆம் தேதி நான் இங்கு வந்திருக்கிறேன். அடுத்து, 11-ஆம் தேதி ஓசூருக்குச் சென்று, 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலையில் ஆட்டோமேட்டட் லேன் அமைப்பையும், பணியாளர் தங்குமிடத்தையும் திறந்து வைத்து, 1,100 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தொழிற்சாலைகளுக்கும் அடிக்கல் நாட்ட இருக்கிறேன்.

அதேமாதிரி, ஏற்கனவே தூத்துக்குடியில் நடத்தியதுபோன்று, ஓசூரிலும் முதலீட்டாளர் மாநாட்டை நடத்தப் போகிறோம். அங்கும் பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு வர இருக்கிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான எங்களுடைய வெளிநாட்டுப் பயணங்களும், இங்கே மேற்கொள்ளும் பயணங்களும் எப்போதும் நிற்காது, இது தொடரும்... தொடரும்...

அக்டோபர் 30 : பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த நாள்

“பசும்பொன் தேவர் திருமகனார்”

- பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களைத் “தேவர் திருமகன்” என்று அன்போடு அழைத்தார்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை 2007 ஆம் ஆண்டு மாபெரும் அரசு விழாவாக நடத்திப் பெருமை சேர்த்தார்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் பசும்பொன் கிராமத்துக்கு ரூ.2.5 இலட்சம் செலவில் பல்வேறு பணிகளைச் செய்து கொடுத்தார்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மதுரை, ஆண்டாள்புரம் பாலத்துக்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் பாலம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் நினைவிடத்தில், பொதுமக்கள் சிரமமின்றி அஞ்சலி செலுத்த வசதியாக ரூ.1.50 கோடி செலவில் இரண்டு நிரந்தர மண்டபங்கள் அமைத்துக் கொடுத்தார்.

ஒசூரில் "தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2025" ரூ.24,307 கோடி முதலீட்டில் 49,353 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 11.09.2025 அன்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், ஒசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 23,303.15 கோடி ரூபாய் முதலீட்டில், 44,870 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 53 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், 1,003.85 கோடி ரூபாய் முதலீட்டில் 4,483 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில், 39 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆக மொத்தம், ரூ.24,307 கோடி முதலீட்டில் 49,353 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 3 முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கிவைத்து, 1,210 கோடி ரூபாய் முதலீட்டில் 7,900 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 4 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அத்துடன், நான்கு நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

ஒசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்கள் பற்றிய குறிப்பு

Aspire Footwear Private Limited – அரவிந்த் குழுமத்தின் துணை நிறுவனமான Aspire Footwear Private Limited, வேலூர் மாவட்டம், சிப்காட் காட்பாடி தொழில் பூங்காவில், 350 கோடி ரூபாய் முதலீட்டில் 6,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், தோல் அல்லாத காலணிகள் உற்பத்தித் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

Zetwork நிறுவனம் – Zetwork நிறுவனம், 5,000 கோடி ரூபாய் முதலீட்டில் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில், சோலார் செல்கள் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்க முன்வந்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்

மூலம், சூரிய எரிசக்தி துறையில், துணை நிறுவனங்களை ஊக்குவித்து, அதன் மதிப்புச் சங்கிலியை வலுப்படுத்துவதோடு, பசுமை ஆற்றல் ஏற்றுமதியை நன்கு அதிகரித்திடும்.

DCX Systems Limited, IAI–ELTA Systems உடன் இணைந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய உற்பத்தித் திட்டம் அமைக்க உள்ளது. இத்திட்டத்தில், 850 கோடி ரூபாய் முதலீட்டில் 165 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில், வான்படை, கடற்படை மற்றும் தரைப்படை பயன்பாட்டிற்கான மேம்படுத்தப்பட்ட ரேடார் மற்றும் மின்னனு போர் அமைப்புகளை வடிவமைத்து உற்பத்தி மேற்கொள்ளப்படும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

International Aerospace Manufacturing Pvt., Ltd., (IAMPL) நிறுவனம், ஓசூர் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இயங்கிவரும் தனது வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தி நிலையத்தை விரிவாக்கம் செய்ய உள்ளது. 200 கோடி ரூபாய் முதலீட்டில் 69 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில், துல்லிய உபகரணங்கள் உற்பத்தித் திட்டத்தை விரிவாக்கம் செய்திட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

சிப்காட் வருங்கால நகர்திறன் பூங்கா - சிப்காட் நிறுவனம், 210 கோடி ரூபாய் மதிப்பில், 300 ஏக்கர் பரப்பளவில் ஒரு வருங்கால நகர்திறன் பூங்காவை அமைத்துள்ளது. இந்த நகர்திறன் பூங்காவில் இதுவரை 22 நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 2,728 கோடி ரூபாய் முதலீடு, 6,682 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்க உள்ளது. இந்த வருங்கால நகர்திறன் பூங்கா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், 23,303.15 கோடி ரூபாய் முதலீட்டில், 44,870 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 53 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில், 1,003.85 கோடி ரூபாய் முதலீட்டில் 4,483 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில், 39 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டங்களின் விவரங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1,100 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில் 3 திட்டங்களைத் தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	இடம்	முதலீடு ரூ.கோடியில்	வேலைவாய்ப்பு	உற்பத்தித் துறை
1	Kaynes Circuits	போச்சம்பள்ளி	200	300	மின்னணுவியல்
2	SIPCOT - Shoolagiri Future Mobility Park	சூளகிரி	-	-	தொழில் பூங்கா
3	SNS Clothing (Gokaldas Exports)	ஆம்பூர்	50	800	தோல் அல்லாத காலணிகள்

அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களின் விவரங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1,210 கோடி ரூபாய் முதலீட்டில் 7,900 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் வகையில் 4 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அதன் விவரங்கள்:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	இடம்	முதலீடு ரூ.கோடியில்	வேலைவாய்ப்பு	உற்பத்தித் துறை
1	Kauvery Hospitals	ஓசூர்	500	1,500	மருத்துவமனை
2	RICO	சூளகிரி	260	200	மோட்டார் மற்றும் மின் வாகன உதிரிப்பாகங்கள்
3	Aspire Footwear	காட்பாடி	350	6,000	தோல் அல்லாத காலணிகள்
4	Versatile Bonds	பனப்பாக்கம்	100	200	காலணிப் பசைகள்

பணி நியமன ஆணைகள் வழங்குதல்

TEPL, Kaynes, Mando, First Steps Babywear ஆகிய நான்கு தொழில் நிறுவனங்களின் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு இன்னோவேஷன் பிளாட்ஃபார்ம் – அறிமுகம் (Tamil Nadu Innovation Platform–Launch)

வழிகாட்டி நிறுவனம் மற்றும் YNOS வென்ச்சர் இன்ஜின் இணைந்து தமிழ்நாடு இன்னோவேஷன் பிளாட்ஃபார்ம் ஒன்றைத் தொடங்கியுள்ளது, இது மாநிலம் முழுவதும் மாவட்ட வாரியாக உள்ள

புத்தொழில் நிறுவனங்கள், இன்குபேட்டர்கள், மற்றும் முதலீட்டாளர்கள் குறித்த தரவுகளை ஒருங்கிணைக்கும் முயற்சியாகும். இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

ஜெர்மனி, இலண்டன் ஆகிய ஐரோப்பியப் பயணத்தை முடித்துவிட்டு 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீட்டுடன் தமிழ்நாட்டிற்குத் திரும்பிய மூன்று நாளில், இந்த முதலீட்டாளர் மாநாடு மூலமாக உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்! அதாவது நான் சென்றுவந்த பயணத்தில், 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீடு என்றால், இன்றைக்கு இங்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் கையெழுத்தாகி இருக்கின்றன! நம்முடைய ரெக்கார்டை நாம்தான் பீட் செய்கிறோம்!

அதுமட்டுமல்ல, 8 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 1,210 கோடி ரூபாய் முதலீட்டில், 4 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

ஓசூர் – திறமையும், புதுமையும் சந்திக்கும் நகரமாக இருக்கிறது! தமிழ்நாட்டின் தொழில் வரைபடத்தில் தனித்த அடையாளம் பெற்ற நகரம் ஓசூர்! வளர்ச்சியின் முகம்! இந்தியாவைக் கடந்து, உலக அளவில் கவனத்தை ஈர்க்கும் நகரமாக ஓசூர் ஒளிவீசுகிறது. அப்படிப்பட்ட ஓசூரில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்க வேண்டும் என்று நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று, இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் முதலீட்டாளர்கள் எல்லோரையும் தொழில்துறை அமைச்சர் வரவேற்றிருந்தாலும் நானும் உங்களை அன்புடன் வருக... வருக... என்று வரவேற்கிறேன்.

தமிழ்நாடு தொழில்துறையில் இவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் – துடிப்பான – இளமையான அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்கள். சென்ற மாதம், தூத்துக்குடியில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தைத் தொடங்கி வைத்து, முதலீட்டாளர் மாநாட்டில் கலந்துகொண்டேன். இன்றைக்கு, ஓசூரில் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு, மாலை, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் நியூ டெல்டா ஸ்மார்ட் மேனுஃபேக்ட்சரிங் லைனைத் திறந்துவைத்து அங்கு உரையாற்ற இருக்கிறேன்.

அடுத்தடுத்த மாதங்களுக்கும் Target கொடுத்திருக்கிறேன். அமைச்சர், தொழில்துறை அதிகாரிகளின் வேகம் மட்டுமல்ல – முதலீட்டாளர்களான உங்களின் ஆர்வமும்தான் என்னை இங்கு வரவைத்திருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனே – நாங்கள் set செய்த Goal 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி! மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும் என்றால், அதற்குத் தொழில் வளர்ச்சிதான் அடிப்படை! அதனால்தான் அதற்கான கட்டமைப்புகளை மிகவும் சிறப்பான வகையில் உருவாக்கி அவற்றை மேலும், மேலும் மேம்படுத்தி அதன்மூலமாகத் தொழில் செய்யும் சூழலை வலுப்படுத்துகிறோம்! அதனால்தான், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில் 11.19 விழுக்காட்டைத் தொட்டிருக்கிறது.



இந்த வளர்ச்சியை இன்னும் அதிகரிக்கத்தான், முதலீட்டாளர்கள் மாநாடுகளையும், முதலீட்டாளர்களுடனான சந்திப்புகளையும் நாம் தொடர்ச்சியாக நடத்தி வருகிறோம். திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் தமிழ்நாட்டைப் பற்றித் தெரிந்துகொண்டு, முதலீட்டாளர்கள் ஆர்வமாக வருகிறார்கள். ஒவ்வொரு முறையும் தொழில்துறைக்கான அமைச்சரையும், அதிகாரிகளையும் சந்திக்கும்போது, நான் சொல்வது ஒன்றுதான்...

அது என்னவென்றால், "M.o.U எல்லாம் செயல்பாட்டிற்கு வர வேண்டும். அந்த Conversion-இல் Focus செய்யுங்கள்! அந்த Process நம்முடைய அரசாங்கத்தில் வேகமாக நடக்க வேண்டும் என்று சொல்வேன்.

மகிழ்ச்சியுடன் உங்களிடம் சொல்கிறேன்... நாங்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 77 சதவீதம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன! எங்களுடைய குறிக்கோள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டும்! அதைத்தான் செய்து காட்டிக்கொண்டு இருக்கிறோம்.

கடந்த 4 ஆண்டுகளில், இதுவரை இல்லாத அளவிற்கு ஒரு பெரும் தொழில் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் ஓசூர் பார்த்து வருகிறது. ஓசூர் உட்பட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏராளமான புதிய தொழிற்சாலைகள் இந்த நான்காண்டு காலத்தில் கொண்டுவந்திருக்கிறோம். ஒரு காலத்தில், "சிறிய தொழில் நகரம்" என்று சொல்லப்பட்ட ஓசூர், இன்று பல கம்பெனிகளுக்கு 'Favourite Destination'-ஆக உருவெடுத்திருக்கிறது.

இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் – ஓசூருக்கும் தமிழ்நாடு அரசு என்னென்ன செய்திருக்கிறது என்று சொல்ல வேண்டும் என்றால்,

முதலில் – இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் M.S.M.E. நிறுவனங்கள் இயங்கி வருகிறது. ஓசூர் தொழில் வளர்ச்சிக்காக நாம் செய்ததில் முக்கியமானது சிப்காட் தொழில் பூங்கா. 2 ஆயிரத்து 92 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கும் ஓசூர் சிப்காட்டில், 371 தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது. 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

இரண்டாவது – சிறப்பான உட்கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் இந்தத் தொழிற் பூங்காவில், தடையில்லாமல் நீர் வழங்க T.T.R.O. நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மூன்றாவது – சிப்காட் நிறுவனம் FORT இன்குபேட்டர்கள் அமைத்திருக்கிறது. இந்த இன்குபேட்டர், தொழில்துறை மாற்றத்தை விரைவுபடுத்தும் நோக்கில் செயல்படுகிறது.

நான்காவது – சூளகிரி பகுதியில் 689 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா.

ஐந்தாவது – பர்கூரில் ஆயிரத்து 379 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலத்துடன் கூடிய தொழில் பூங்கா.

ஆறாவது – குருபரப்பள்ளியில் 150 ஏக்கரில் தொழில் பூங்கா ஆகிய தொழில் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் நிறுவி இருக்கிறது.

அடுத்து, ஏழாவதாக – இன்றைக்குத் திறந்திருக்கும் ஃபியூச்சர் மொபிலிட்டி பார்க்! 210 கோடி ரூபாய் மதிப்பில், 300 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்தப் பூங்காவில், இதுவரை, 22 நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2 ஆயிரத்து 728 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு பெறப்பட்டிருக்கிறது. 6 ஆயிரத்து 682 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட இருக்கின்றன.

எட்டாவது – தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமத்தில் டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் டிட்கோவுடன் இணைந்து, விடியல் ரெசிடென்சி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் மூலமாகப் பணியாளர்கள் தங்க, 64 ஏக்கரில் தொழிலாளர் குடியிருப்பு கட்டிவருகிறார்கள். முதற்கட்டமாக 6 ஆயிரம் பேர் தங்கும் வகையில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருக்கிறது. இதன் மூலமாக, பணிபுரியும் மகளிர் பாதுகாப்பும் வசதியும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பணிபுரியும் மகளிர் எண்ணிக்கையும் இதனால் வெகுவாக அதிகரிக்கும்.

அடுத்து ஒன்பதாவதாக – G.C.C.-கள், I.T. நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், உயர்தர ஆராய்ச்சி மையங்கள் ஆகியவற்றிற்கான மையமாக ஓசூரை உருவாக்க ஓசூர் 'Knowledge Corridor' உருவாக்கப் போகிறோம். கிருஷ்ணகிரி – பாகலூர் புறவழிச்சாலை, வெளிவட்டச் சாலை, சாட்டிலைட் டவுன் ரிங் ரோடு வடக்குப் பகுதி ஆகிய சாலைகளின் இரு புறங்களிலும் இந்த அறிவுசார் வழித்தடத் திட்டத்தைச் செயல்படுத்தப் போகிறோம். இதன்மூலமாக, அறிவுசார் பொருளாதாரம் பெருமளவில் அதிகரிக்கும், இந்த மாவட்டத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சி நன்கு மேம்படும்.

பத்தாவதாக – ஓசூரில், 5 இலட்சம் சதுர அடியில், 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில், டைடல் பார்க் நிறுவப்படுகிறது. உலகத்தரம் வாய்ந்த இந்த I.T. பார்க்கில், I.T. நிறுவனங்கள், G.C.C.-கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் ஈர்க்கப்பட்டு, கிட்டத்தட்ட 6 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

பதினொன்றாவதாக – இவை எல்லாவற்றிற்கும், ஓசூர் விமான நிலையத்தை உருவாக்க முக்கியத்துவம் தருகிறோம். ஓசூரில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் உலகத்தரம் வாய்ந்த அதிநவீனக் கட்டமைப்பு வசதிகளுடன் ஒரு பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்று ஏற்கனவே நான் அறிவித்திருந்தேன். இந்த புதிய விமான நிலையத்தை அமைக்க, ஓசூர் பகுதியைச் சுற்றியிருக்கும் பொருத்தமான நிலப் பகுதி அடையாளம் காணப்பட்டு, அதைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தப் பன்னாட்டு விமான நிலையம், மற்றுமொரு புதிய வளர்ச்சிப் பாதையில் ஓசூரைப் பயணிக்க வைக்கும்.

இப்போது நான் பட்டியலிட்ட பதினொன்று மட்டுமல்ல. இன்னும் பல தொழில்துறை சார்ந்து மட்டுமே, இவ்வளவு வேலைகளை கிருஷ்ணகிரிக்காக அதுவும் ஓசூருக்காகச் செய்து வருகிறோம். அதனால்தான் மற்ற மாநிலங்களை Challenge செய்யும் நகரமாக ஓசூர் இன்றைக்கு Develop ஆகியிருக்கிறது. சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கும், தன்னம்பிக்கையோடு முன்னேறும் மகளிருக்கும்,

ஒரு வலுவான மேடையை வழங்கி வருகிறோம். தொழிற்சாலைகள், ஓசூரை நோக்கித் தொடர்ந்து சாரைசாரையாக வருகிறார்கள்!

இ-ஸ்கூட்டர் உற்பத்தியின் தலைநகராகவும் ஓசூர்தான் இருக்கிறது! இதன் தொடர்ச்சியாக இந்த மாநாடு, ஓசூரின் அடுத்தகட்ட உயர்வுக்கான கதவுகளைத் திறக்கும்! நான் அதைத் தொடர்ந்து கண்காணிப்பேன். ஸ்டாலின் என்ற பெயருக்கு 'Man of Steel'-என்று பொருள்! உறுதியோடு சொல்கிறேன். எஃகு போன்ற உறுதியுடன் என்னுடைய இலக்குகளில் வெற்றி பெறுவேன்! எங்கள் அரசு மேல் நீங்கள் நம்பிக்கை வைத்து, முதலீடு செய்ய வந்திருக்கும் உங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை நிச்சயமாக நாங்கள் வழங்கக் காத்திருக்கிறோம். வழங்குவோம். தமிழ்நாட்டுடன் இணைந்து பயணம் செய்தால் கண்டிப்பாக வெற்றி தான்!

அதனால் எப்போதும் உங்கள் முதலீடுகளை நம்முடைய தமிழ்நாட்டிலேயே மேற்கொள்ளுங்கள்! கடந்த மாநாட்டிலும் நான் சொன்னேன்... Tamil Nadu Rising மட்டுமல்ல. Tamil Nadu will keep on Rising-என்று சொன்னேன். நாளைய தமிழ்நாடு, வளர்ச்சிக்கு நல்லுதாரணமாக உலகத்திற்குத் தன்னை வெளிப்படுத்தியிருக்கும் இந்த சிறப்பான மேடையில் இருந்து ஒரு அறிவிப்பைச் செய்ய நினைக்கிறேன்.

MSME துறை சார்பில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், அக்டோபர் 9, 10–ஆம் தேதிகளில், கோயம்புத்தூரில் ஒரு உலக புத்தொழில் மாநாட்டை நடத்த இருக்கிறது. இந்த மாநாடு உலகம் முழுவதுமிருந்து தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள், இன்குபேட்டர்கள், புத்தொழில் முனைவோர் ஆகியோரை ஒருங்கிணைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமையும். ஸ்டார்ட்–அப் செக்டாரில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்த மாநாடு உலகிற்குப் பறைசாற்றும்!

அந்த நிகழ்விற்கும் உங்களை எல்லாம் நான் வரவேற்கக் காத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் முன்னேற்றம் நிச்சயம்! தமிழ்நாடு முன்னேற உங்கள் பங்களிப்பு எந்நாளும் அவசியம்! என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்கள் பிறந்தநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.09.2025 அன்று, விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் 108-ஆவது பிறந்தநாளையொட்டி சென்னை, கிண்டியில் அமைந்துள்ள இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் "இசைஞானி இளையராஜா" அவர்களுக்கு பொன்விழா ஆண்டு பாராட்டு விழா...

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், அன்புமிளிர இசைஞானி என அழைத்துப் போற்றப்பட்ட திரு.இசைஞானி இளையராஜா அவர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி போன்ற பல்வேறு மொழிகளில் 1,500க்கும் மேற்பட்ட திரைப்படங்களில், 8,500க்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ளார்.

1975-ஆம் ஆண்டு துவங்கிய இசைஞானி இளையராஜா அவர்களின் இசைப் பயணம் இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. முழு மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனி இசை சிகரத்தையும் தொட்டு சாதனை படைத்துள்ளார்.

திரையுலகில் பொன் விழா காணும் சிகரம் தொட்ட தமிழன் திரு. இசைஞானி இளையராஜா அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மிகப்பெரிய அளவில் பாராட்டு விழா 13.09.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இன்னிசை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து இசைஞானி இளையராஜா அவர்களின் சிம்பொனி இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றினார். உலக நாயகன் திரு. கமல்ஹாசன், எம்.பி., அவர்களும், சூப்பர் ஸ்டார் திரு. ரஜினிகாந்த் அவர்களும் வாழ்த்துரை ஆற்றினார்கள். நிறைவாக திரு. இசைஞானி இளையராஜா எம்.பி., அவர்கள் ஏற்புரை ஆற்றினார். மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், நன்றியுரை ஆற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.09.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற "சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு 50 பாராட்டு விழாவில்" கலந்து கொண்டு ஆற்றிய உரை.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

ராஜா... ராஜாதி ராஜன் இந்த ராஜா... நேற்று இல்லை நாளை இல்லை எப்பவும் நீ ராஜா...!" இசை எனும் தேனை உலகத்துக்கே தரும் இந்தத் தேனிக்காரரைப் பாராட்ட, புகழ நாம் எல்லோரும் இங்கே கூடியிருக்கிறோம்!

நம்முடைய இசைஞானி அவர்கள், கலைத்தாய்க்கு மட்டும் சொந்தமானவர் இல்லை; தமிழ்த்தாய்க்கும் சொந்தமானவர்! அதனால்தான், தமிழ்நாடு அரசு சார்பில், இந்தப் பாராட்டு விழாவை, அவரைக் கொண்டாடும் விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்!

பாராட்டும், புகழும் ராஜா அவர்களுக்குப் புதிதா? கிடையாது.... நிச்சயமாகச் சொல்கிறேன்... இசைஞானி அவர்களைப் பாராட்டுவதால் நாம் தான் பெருமை அடைகிறோம்!

இசைஞானி இளையராஜா அவர்கள், தனது திரையுலகப் பயணத்தைத் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகிறது! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய இதயங்களை ஆளத்தொடங்கி, 'அரை நூற்றாண்டு காலம்' ஆகிறது!

திரைப்பயணத்தில் பொன்விழா கண்டிருக்கும் 'சிம்பொனி சிகரம் தொட்ட தமிழர்' இளையராஜா அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் சார்பில், உங்களில் ஒருவனாக இருந்து என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

பண்ணைபுரத்தில் இருந்து புறப்பட்ட இந்த மனிதர், திறமையும், உழைப்பும் இருந்தால், எப்பேர்ப்பட்ட உயரங்களையும் அடையலாம் என்று, அனைத்து மனிதர்களுக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்! இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் ராஜாவின் பாடல்களை முணுமுணுக்காத உதடுகளே தமிழ்நாட்டில் இருக்க முடியாது!

ராஜாவின் பாடல்களை மனதில் ஏற்றி, தங்களின் இன்ப, துன்பங்களைப் பொருத்திப் பார்த்துக் கொள்ளாத மனிதர்களே இருக்க முடியாது! இளையராஜா அவர்களின் இசை – தாயாகத் தாலாட்டுகிறது! காதலின் உணர்வுகளைப் போற்றுகிறது! வெற்றிப் பயணத்துக்கு ஊக்கமளிக்கிறது! வலிகளை ஆற்றுகிறது!

உண்மையில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இவர் இளையராஜா மட்டுமல்ல; இணையற்ற ராஜா!

ஒரு ராஜா இருந்தால், அவருக்கென்று நாடு இருக்கும்; மக்கள் இருப்பார்கள்; எல்லைகள் இருக்கும்! ஆனால், இந்த ராஜா – மொழிகளைக் கடந்தவர் – நாடுகளைக் கடந்தவர் – எல்லைகளைக் கடந்தவர்! அனைத்து மக்களுக்குமானவர்! திரையிசையைக் கடந்த இளையராஜா அவர்களின் இசை, அவரது திறனை, அவரது வீச்சை, அவரது ஆற்றலை, அவரது ஆழத்தை, அவரது உயரத்தை, எடுத்துச் சொல்லும்! இந்த நேரத்தில், இசைஞானி அவர்களைப் பற்றி, சோஷியல் மீடியாவில் ஒருவர் எழுதிய சில வரிகளைச் சொல்ல விரும்புகிறேன்...

இளையராஜா மட்டும் இசையமைத்திருந்தால்...! திருக்குறளும் - நற்றிணையும் – புறநானூறும் – குறுந்தொகையும்- ஐங்குறுநூறும் – பதிற்றுப்பத்தும் – பரிபாடலும்- சிலப்பதிகாரமும் – எங்களுக்கு மனப்பாடம் ஆகியிருக்கும் என்று எழுதியிருந்தார்!

இசைஞானி அவர்களே, நானும் இதையேதான் தமிழ் ஆர்வலராக உங்களிடம் கோரிக்கையாக வைக்கிறேன்!

சங்கத்தமிழுக்கு, தமிழ் இலக்கியங்களுக்கு நீங்கள் இசையமைத்துச் சில ஆல்பங்களை வெளியிடவேண்டும்! எப்போதும் முதலமைச்சரிடத்தில்தான் கோரிக்கை வைப்பார்கள்; ஆனால், முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டு மக்களின் சார்பில், தமிழர்களின் சார்பில், நான் உங்களுக்குக் கோரிக்கை வைக்கிறேன். இசை ஆளுமையும், தமிழ்ப்புலமையும் கொண்ட நீங்கள், இந்தக் கடமையைச் செய்யவேண்டும்! ஏற்கனவே, தமிழ்நெஞ்சங்களில், சிம்மாசனமிட்டு உட்கார்ந்திருக்கின்ற உங்கள் மூலமாக, உங்கள் இசைமூலமாக, தமிழ்ச்சுவை அடுத்தடுத்த தலைமுறையினருக்குப் பரிமாறப்படவேண்டும்! ஏனென்றால், "ராஜா கைய வெச்சா அது ராங்கா போனதில்ல..." அந்த நம்பிக்கையுடன் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்!

இசையால், நம் நெஞ்சங்களை ஆளும் இளையராஜா அவர்களுக்கு, எத்தனையோ புகழ் மகுடங்கள், பாராட்டு மாலைகள், பத்ம பூஷண், பத்ம விபூஷண் போன்ற பட்டங்கள் இருந்தாலும், அவருக்கென அவருடைய ஆற்றலுக்கென பொருந்தி, அவருடன் என்றைக்கும் பயணிக்கின்ற பட்டம்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வழங்கிய 'இசைஞானி' பட்டம்! அது பட்டமா இல்லை, பெயராகவே நிலைத்துவிட்டது!

இசைஞானி அவர்களின் உயரங்களைப் பார்த்துப் பெருமைப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, இசைஞானி அவர்கள் வழங்கிய மரியாதை, யாரும் யாருக்கும் தராத மரியாதை!

வரலாற்றில் எத்தனையோ மாமனிதர்கள் ஒரே பிறந்தநாளைக் கொண்டாடக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால், யாரும் இன்னொருவருக்காகத் தங்களுடைய பிறந்தநாளை மாற்றிக்கொண்டது கிடையாது! ஆனால், இசைஞானி அவர்கள், தலைவர் கலைஞருக்காகத் தன்னுடைய பிறந்தநாளை ஜூன் 2-ஆம் நாளாக மாற்றிக்கொண்டார்.

அந்த வகையில், உள்ளத்திலும் ராஜாவாக உயர்ந்து நிற்கிறார் இசைஞானி அவர்கள்! தமிழாலும் – இசையாலும் – உயர்ந்தது கலைஞருக்கும் – இசைஞானிக்கும் இருந்த நட்பு! தனிப்பட்ட முறையில் என்னால் மறக்க முடியாத நிகழ்வு என்றால், என்னுடைய மகள் செந்தாமரை அவர்களின் நாட்டிய அரங்கேற்றத்தில் இளையராஜா அவர்கள் பங்கேற்று வாழ்த்தினார். அந்த நட்போடு, அவர் இலண்டனில் சிம்பொனி அரங்கேற்றம் செய்யப் போகிறார் என்று செய்தி வந்தவுடனே, அவருடைய வீட்டுக்கு முதல் நபராகச் சென்று என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துகளைத் தெரிவித்தேன்!

ராஜா அவர்களும் சிம்பொனி சாதனையை நிறைவேற்றிய வெற்றிக் களிப்புடன், என் வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்தார்! இந்த அன்புக்கு நான் என்றைக்கும் கட்டுப்பட்டவன்! கடமைப்பட்டவன்! அந்த அன்புடன் சொல்கிறேன்... இது இசைஞானி இளையராஜாவுக்காக நடத்தக்கூடிய பாராட்டு விழா மட்டுமல்ல! உங்களுக்கு நாங்கள் எல்லோரும் நன்றி தெரிவிக்கக்கூடிய விழா!

இப்படிப்பட்ட இந்த சிறப்பான விழாவில், ஒரு அறிவிப்பு வெளியிடாமல் நான் இருக்க முடியுமா? இசைத்துறையில், ஆர்வத்துடன் சிறந்த இசையைப் படைக்கின்ற இசைக்கலைஞர்களை ஊக்குவிக்கின்ற விதமாகத் தமிழ்நாடு அரசின் சார்பில், இனி ஆண்டுதோறும் 'இசைஞானி

இளையராஜா' பெயரில் விருது வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

அறிவிப்பு மட்டுமல்ல, ஒரு கோரிக்கையும் முன்வைக்கிறேன். நமது இளையராஜாவின் சாதனைகளுக்கு எந்த மகுடம் சூட்டினாலும், அது சாதாரணம் தான். அப்படிப்பட்ட மேதைக்கு இந்தியாவின் உயரிய விருதான "பாரத ரத்னா" விருது வழங்கப்பட வேண்டும் என்ற ஆவலை இந்த மேடையில் நின்று உங்கள் அனைவரின் சார்பில், தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கும் இருக்கக்கூடிய ராஜாவின் ரசிகர்களின் சார்பில் இந்த விழாவில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது நிச்சயம் நிறைவேறும் என்று நான் நம்புகிறேன்.

இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து வெற்றி கண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும், செய்தித்துறை அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இசைஞானிக்காக இந்த விழாவுக்கு வந்து சிறப்பு செய்த அன்பு நண்பர்கள் என்னுடைய மதிப்பிற்குரிய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கும், அதேபோல், கலைஞானி திரு. கமல்ஹாசன் அவர்களுக்கும், கலையுலகைச் சார்ந்திருக்கக்கூடிய அத்தனை நண்பர்களுக்கும், தோழமைக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் அத்தனை பேருக்கும், நிறைவாக, இங்கு மட்டுமல்ல, தொலைக்காட்சி மூலமாகவும் கண்டு களித்துக் கொண்டிருக்கக்கூடிய கோடானுகோடி ரசிகர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரங்கத்தில், இசைஞானி அவர்களுடைய இசையைக் கேட்டு மயங்கியிருக்கும் எல்லோருடைய உணர்வுகளை, அவருடைய பாடல் வரிகளிலேயே சொல்லவேண்டும் என்றால், "இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே... இன்பத்தில் ஆடுது என் மனமே!"

இசைஞானி அவர்களே... உங்கள் பயணம் இன்னும் பல்லாண்டுகாலம் தொடர வேண்டும்! தொடர வேண்டும்! என்று தமிழ் மக்களின் சார்பில் வாழ்த்துகிறேன்.

வாழ்க இளையராஜா! வாழ்க இசைராஜா!

நன்றி! வணக்கம்!

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

இசைத்துறையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்திருக்க கூடிய மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் இசைஞானி இளையராஜா சார் அவர்களுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற இந்த பிரம்மாண்ட பாராட்டு விழாவில், வரவேற்புரை ஆற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன், பெருமையடைகின்றேன்.

இந்த வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு எத்தனையோ அடையாளங்கள் இருக்கின்றன. அதில் மிக, மிக முக்கியமான அழிக்க முடியாத அடையாளமாக இசைஞானி இளையராஜா சார் அவர்களும், அவருடைய இசையும் இன்றைக்கு நம்மோடு இருக்கின்றது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீதும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதும் தணியாத பாசம் கொண்டவர் நம்முடைய இசைஞானி இளையராஜா அவர்கள்.

இளையராஜா சாரின் இசைக்கு தானும் ஒரு ரசிகர் என்கிற வகையில்,, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 1988-ஆம் ஆண்டில் "இசைஞானி" என்ற பட்டத்தை நம்முடைய இசைஞானி அவர்களுக்குச் சூட்டினார்.

அதுபற்றிக் கலைஞர் அவர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதி இருந்தார். அதில், "1988 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு விழாவில் "இசைஞானி" என்ற பட்டத்தினை யாரும் சொல்லாமல், முன்கூட்டியே திட்டமிடாமல், என்னுடைய இதயத்தில் மண்டிக் கிடந்த அன்பின் காரணமாக இளையராஜா அவர்களுக்குச் சூட்டி மகிழ்கின்றேன்" என்று கலைஞர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்.

அப்படிப்பட்ட இசைஞானி இளையராஜா அவர்களுக்கு இன்றைக்குப் பாராட்டு விழா எடுத்து நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

நாம் எல்லாரும் வெவ்வேறு தாயின் வயிற்றில் பிறந்து இருந்தாலும், நம் எல்லோரையும் தாலாட்டிக் கொண்டிருக்கக்கூடிய இசைத்தாய் நம்முடைய இளையராஜா அவர்கள்தான்.

அவருடைய பாடல்கள் இல்லாமல் எந்தக் குழந்தைக்கும் தாலாட்டு இல்லை, அவருடைய பாடல்கள் இல்லாமல் இளமையில் துள்ளல் இல்லை, அவருடைய பாடல் இல்லாமல் நாம் அத்தனைபேருக்கும் காதல் இல்லை.

வயல்வெளி, டீக்கடை, திருவிழா, திருமணம், ஆட்டோ, பேருந்து என்று எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கக் கூடிய ஒரே இசைஞானி நம்முடைய இளையராஜா அவர்கள். இசையமைப்பாளர் என்பதைத் தாண்டியும் இசை மருத்துவர் என்று சொல்கின்ற அளவிற்கு அத்தனைப் பேருக்கும் இசைஞானி இளையராஜா அவர்கள் தான் Best Stress Reliever and Companion.

சமீபத்தில் சோசியல் மீடியாவில் ஒரு தகவலைப் படித்தேன். அதை இந்த நேரத்தில் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். பொதுவாக நாம் அத்தனைபேரும் தூரத்தை, (Distance-ஐ) மீட்டர், கிலோ மீட்டர், மைல்ஸ் என்றுதான் அளப்போம். ஆனால், இசைஞானி அவர்களின் ரசிகர்கள் மட்டும் தான். சென்னை to விழுப்புரம் எவ்வளவு தூரம் என்றால் 25 இளையராஜா சார் பாடல்கள் என்று சொல்லுவார்கள்.

அந்த அளவுக்கு எல்லோருடைய பயணத்திலேயும், எல்லோருடைய வாழ்க்கைப் பயணத்திலேயும், வழித்துணையாக இருப்பவர் நம்முடைய இசைஞானி அவர்கள். என்னுடைய சிறுவயது முதல், கோடிக்கணக்கான உங்களைப்போன்ற தமிழர்களைப் போல நானும் இசைஞானி அவர்களின் இசையோடு சேர்ந்து தான் வளர்ந்தேன்.

பயணங்களாக இருக்கட்டும், தனிமையா இருக்கட்டும், Family time-ஆ இருக்கட்டும், Workout time-ஆ இருக்கட்டும் என்னுடைய Play List-ல உங்களுடைய Play List மாதிரி எப்போதுமே இசைஞானி அவர்களின் பாடல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

'இசை – இசைஞானி இளையராஜா' என்கின்ற டைட்டில் கார்டின் மூலமாகவே பல வெற்றிப் படங்களைத் தமிழ்நாட்டிற்குத் தந்த பெருமை நம்முடைய இசைஞானிக்கு மட்டுமே உண்டு.

இளையராஜா சார் முதன் முதலாக இசை அமைத்த படம் அன்னக்கிளி. வருடம் 1976 அப்போது நான் பிறக்கக் கூட இல்லை. அன்றைக்கு தொடங்கிய அவரது இசைப் பயணம், இன்றைக்குப் பல பரிமாணங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, மிகக் கடினமான இசை வடிவம் என்று சொல்லப்படுகின்ற சிம்பொனி இசையை லண்டனில் அரங்கேற்றி, தன்னுடைய 82 வது வயதிலும் இசைஞானி அவர்கள் புதுப்புது சாதனைகளைத் தினம் படைத்துக் கொண்டிருக்கிறார்.

எப்படி ஒருத்தர் சுறுசுறுப்பாக Discipline-ஆ, அதே நேரத்தில் Creative-ஆ இருக்க வேண்டும் என்பதற்கு நம் அத்தனைபேருக்கும் ஒரு உதாரணமாக இருக்கக்கூடியவர் தான் நம்முடைய இசைஞானி அவர்கள்.

இலண்டனில் அரங்கேற்றப்பட்ட இசைஞானியுடைய சிம்பொனியை நேரில் கேட்டு ரசிக்க முடியவில்லை என்று உங்களில் பலபேருக்கு வருத்தம் இருந்திருக்கும். அதே வருத்தம் இன்றைக்கு வரைக்கும் எனக்கும் இருந்தது. அந்த ஏக்கத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய அரசு

இன்றைக்கு நம் அத்தனைபேருக்கும் செய்து காட்டியுள்ளது.

அதுவும் மிகப்பெரிய ஒரு பாராட்டு விழாவுடன் இன்றைக்குச் சிம்பொனி இசை விழாவும் நடந்து இருக்கிறது. இது இசைஞானி அவர்களுக்கு மட்டும் பெருமை அல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும், ஒவ்வொரு தமிழனுக்கும் பெருமை.

இந்தப் பெருமைக்குரிய விழாவிற்கு தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வருக வருகவென வரவேற்கின்றேன்.

விழாவினுடைய நாயகர் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் இசைஞானி அவர்களை வருக, வருகவென வரவேற்கின்றேன்.

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர், உலக நாயகன் கமல்ஹாசன் சார் அவர்களையும் வருக, வருகவென்று வரவேற்கிறேன்.

சிறப்புக்குரிய விழாவுக்கு வருகை தந்துள்ள நம்முடைய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சார் அவர்களையும் வருக, வருகவென்று வரவேற்கிறேன்.

மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர்களை வருக, வருக என வரவேற்கிறேன்.

நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் மு.பெ.சாமிநாதன் அவர்களையும், நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் மாமா அவர்களையும், வந்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், தோழமைக் கட்சியினுடைய அனைத்துத் தலைவர்களையும், மாண்புமிகு நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களையும், மாண்புமிகு மேயர் உள்ளிட்ட, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும்,

இளையராஜா சாருடைய குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், ஐ.ஏ.எஸ்., அவர்களையும், முதலமைச்சருடைய செயலாளர் திரு. ம.சு.சண்முகம், ஐ.ஏ.எஸ்., அவர்களையும்,

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. வே.ராஜாராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களையும்,

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றேன்.

திரையுலகம் மற்றும் இசை உலகைச் சேர்ந்த அனைத்து நண்பர்களையும், ஆளுமைகளையும் வருக, வருகவென வரவேற்கிறேன்.

I extend a warm welcome to The Royal Philharmonic Concert Orchestra to this historic event, Welcome to Chennai.

உலகம் முழுவதும் இருந்து வருகை தந்துள்ள இசைஞானியினுடைய ரசிகர்கள் உங்களில் ஒருவராக உங்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்கிறேன்.

பத்திரிகை நண்பர்களையும், வந்திருக்கக்கூடிய அனைத்து ரசிகப் பெருமக்களையும் வருக, வருக என வரவேற்று இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்

சென்னை, கிண்டியில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களுக்கு திருவுருவச் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.09.2025 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி – முத்தாத்தாள் நாச்சியார் தம்பதியரின் மகளாக 1730-ஆம் ஆண்டு பிறந்த வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்கள், சிறுவயதிலே வாள் வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம் போன்ற பல்வேறு போர்க்கலைகளைக் கற்றுத் தேர்ந்தார். 1746-ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து, சிவகங்கை சமஸ்தானத்தின் இராணியானார். 1772-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் சிவகங்கையின் மீது போர் தொடுத்த போது, மன்னர் முத்துவடுகநாதர் கடுமையாகப் போர் புரிந்தபோதும் சூழ்ச்சி காரணமாக வீர மரணமடைந்தார்.

பின்னர், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள், மைசூர் மன்னர் ஹைதர் அலி, திப்பு சுல்தான், அக்காலத்தில் திண்டுக்கல் பகுதியை ஆண்ட கோபால் நாயக்கர் ஆகியோர் உதவியுடன் ஆங்கிலேயர்களுடன் போரிட்டு வென்று சிவகங்கைச் சீமையை 1780-ஆம் ஆண்டு மீட்டார்.

அதன்பின், 16 ஆண்டுகள் சிவகங்கைச் சீமையைச் சிறப்பாக ஆட்சி செய்தார். ஆங்கிலேயர்களை எதிர்த்த “முதல் இந்திய விடுதலைப் பெண் போராளி” வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் 25.12.1796 அன்று மறைந்து அழியாப் புகழ் பெற்றார். ■

“வேலூரில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிக்கு வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டப்படும்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவு - 19.09.2025

விடுதலை வீரர்களின் நினைவைப் போற்றுவதைத் தலையாயக் கடமையாகக் கருதும் நமது திராவிடமாடல் அரசு பொறுப்பேற்றதில் இருந்து,

அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் இசையார்ந்த நாட்டிய நாடகம்,

2023-ஆம் ஆண்டு டெல்லி குடியரசு நாள் விழா அணிவகுப்பு ஊர்தியில் வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலை எனத் தொடர்ந்து அவரது புகழ்பாடி வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாக, இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய முதல் பெண் போராளி - ஆங்கிலேயர்களை வெற்றி கொண்ட வீரமங்கை வேலுநாச்சியாரின் திருவுருவச் சிலையைக் கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தேன்.

இந்த மகிழ்ச்சிமிகு நாளில், வேலூரில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிக்கு வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டப்படும் எனப் பெருமிதத்துடன் அறிவிக்கிறேன்.

மண் - மானம் காக்கப் புயலெனப் புறப்பட்ட வீரத்தாய் வேலுநாச்சியாரின் வரலாறும் - அவருக்குத் துணை நின்ற மருது சகோதரர்கள் உள்ளிட்ட தீரமிக்க தமிழர்களின் வரலாறும், இந்த மண் யாருக்கும் தலைகுனியாது எனும் வரலாற்றை உரக்கச் சொல்லும்!

தெரிந்து கொள்வோம்

குடியிருப்புக் கட்டடங்களுக்கும் உடனடியாகக் கட்டட அனுமதி பெறுவதற்குக் கூடுதல் வசதி

- ★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் கீழ் இயங்கும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், தமிழ்நாட்டில் முதன்முறையாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர், நடுத்தர மக்கள் இணையதளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடிபரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் தரைத்தளம், முதல் தளம் (Ground floor + 1 floor) கொண்ட 7 மீட்டர் வரையுள்ள குடியிருப்புக் கட்டுமானத்திற்கு உடனடியாக ஒற்றைச்சாளர முறையில் கட்டட அனுமதிகளைப் பெறும் ஒரு ஒருங்கிணைந்த புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார். தற்போது இத்திட்டத்தின் மூலம் 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.
- ★ இத்திட்டமானது மக்களிடம் பெறும் வரவேற்பைப் பெற்றிருக்கும் நிலையில் இத்திட்டத்தினை மேலும் பயனுள்ளதாக்க 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு வாகன நிறுத்துவதற்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தூண் தளம், இரண்டு தளம் (Stilt + 2 Floors) கொண்ட 10 மீட்டர் வரையுள்ள குடியிருப்புக் கட்டடங்களுக்கும் இத்திட்டத்தின்கீழ்ப் பதிவு செய்து உடனடியாகக் கட்டட அனுமதி பெறுவதற்குக் கூடுதல் வசதி 03.09.2025 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பஹ்ரைன் நாட்டின் அஹ்லியா பல்கலைக்கழகத்துடன் நான் முதல்வன் ஸ்கவுட் திட்டத்தின்கீழ்த் தமிழ்நாட்டு மாணவர்கள் உலகளாவிய பயிற்சி பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 13.09.2025 அன்று சென்னை நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சர்வதேச தமிழ் பொறியாளர்கள் மன்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பஹ்ரைன் நாட்டின் அஹ்லியா பல்கலைக்கழகத்துடன் நான் முதல்வன் ஸ்கவுட் திட்டத்தின்கீழ்த் தமிழ்நாட்டு மாணவர்கள் உலகளாவிய பயிற்சி பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்துடன் இணைந்து மாநில அளவிலான பல்வேறு திறன் பயிற்சிகள் அளிப்பதற்கான ஒப்பந்தங்கள் உள்பட பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்ற மாநாட்டில் பங்கேற்று உங்களையெல்லாம் சந்திப்பதில் எனக்கு மகிழ்ச்சி, நான் மிகுந்த பெருமை அடைகின்றேன். நிறைய அரசியல் மாநாடுகளில் கலந்துகொண்டு இருக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், முதன்முறையாக ஒரு பொறியாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்கின்ற வாய்ப்பைக் கொடுத்த சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தினருக்கு முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேற்றைக்குத் தொடங்கி இன்றுடன் இரண்டு நாட்களாக இந்த மாநாடு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. நேற்று Technical Sessions, Exhibitions என்று ஏராளமான சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகள் உங்கள் எல்லோருக்கும் பயனுள்ள வகையில் நிறைய நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு, இந்த நிகழ்ச்சி நடக்கிறது. குறிப்பாக, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) இங்கு கையெழுத்தாகி இருக்கின்றன.

பொதுவாகவே, பொறியாளர்கள் என்று சொன்னால் எதையுமே நேர்த்தியாக

செய்யக் கூடிய, மிகவும் Perfectionist என்று சொல்லுவார்கள். இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனைபேரும் Perfectionist. அதிலும் தமிழ்ப் பொறியாளர்களைப் பத்தி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கிட்டத்தட்ட 1,000 வருசத்துக்கு முன்னாடியே மிகப்பெரிய கட்டுமானங்கள், அணைகளைக் கட்டிய பெருமை நம்முடைய தமிழர்களுக்கு உண்டு.

இன்றைக்கு உலகத்தில் எந்த நாட்டுக்குப் போனாலும், நாம் அங்கு சந்திக்கக்கூடியவர்கள் தமிழ்ப் பொறியாளர்கள்தான். அதுவும் மிகப்பெரிய நிறுவனங்களில் மிகப்பெரிய பொறுப்புகளில் இருக்கக்கூடியவர்கள் நம்முடைய தமிழ்ப் பொறியாளர்கள்தான். இந்த சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் இருக்கின்றீர்கள். 20-க்கும் அதிகமான நாடுகளில் இருந்து வந்திருக்கின்றீர்கள் என்று கேள்விப்பட்டவுடன் ரொம்ப சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு வந்தபோது உங்களில் நிறையபேர் சந்தித்ததாக நான் கேள்விப்பட்டேன். அன்போடு, பாசத்தோடு முதலமைச்சர் அவர்களை வரவேற்று நீங்கள் புகைப்படம் எல்லாம் எடுத்துக் கொண்டீர்கள். உங்களுடைய அன்போடும், ஆதரவோடும், சுமார் 15 ஆயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஈர்த்துக் கொண்டு வந்து இருக்கின்றார்கள். முதலீடுகள் மட்டுமல்ல, 18 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொடுத்திருக்கிறார். இது சாத்தியமானதுக்கு அரசு முயற்சிகள், முதலமைச்சர் அவர்களுடைய முயற்சிகள் இருந்தாலும், உங்களை மாதிரி வெளிநாடுகளில் இருக்கக்கூடிய தமிழ் உறவுகளுடைய ஆதரவும், அன்பும் மிக, மிக முக்கியமான காரணம்.

நாம் வெளிநாடுகளில் அடிக்கடி சந்தித்துக் கொண்டு இருந்தபோதும், இன்றைக்குத் தமிழ்நாட்டில், நம்முடைய தாய்நாட்டில் சந்திக்கின்ற வாய்ப்பு இந்த நிகழ்ச்சியின் மூலமாகக் கிடைத்திருக்கிறது. பொதுவாக மற்ற துறைகளில் வேலை செய்பவர்கள் எல்லாம், அவரவர் துறைகளில் ஸ்பெசலிஷ்டாக இருப்பார்கள். அதில் வேலை செய்வார்கள். ஆனால் பொறியாளர்கள் மட்டும் தான், எல்லாத் துறைகளிலும் ஸ்பெசலிஷ்டாக இருப்பார்கள். அந்த அளவுக்கு Multi-Talented Persons என்றால் இங்கு வந்திருக்கக்கூடிய பொறியாளர்கள் நீங்கள் தான்.

இன்றைக்கு உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான தமிழ்ப் பொறியாளர்கள் இருக்கின்றீர்கள். அதற்கான விதை முதலில் போட்டது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் பொறியியல் கல்லூரிகளை அதிகளவில் திறந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். கல்லூரிகளைத் தொடங்கியதோடு மட்டும் நிற்கவில்லை. பொறியியல் படிக்க நுழைவுத்தேர்வு தேவை இல்லை என்று ரத்து செய்ததும் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

நுழைவுத்தேர்வு ரத்து மட்டுமல்ல. ஏழை, எளிய மாணவர்கள் பொறியியல் படிக்க வேண்டும் என்று, முதல் தலைமுறையாகப் படிக்க வருகின்றவர்களுக்கு அவர்களுடைய கட்டணத்தை அரசே ஏற்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியவரும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு அவரால் தான், ஒவ்வொரு வருஷமும், இந்தியாவிலேயே அதிகமான பொறியியல் பட்டதாரிகள் வெளியில் வருகின்ற மாநிலமாக இன்றைக்குத் தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

பொறியியல் கல்லூரிகளை மட்டுமல்ல, கலைஞர் அவர்கள் உருவாக்கிய Tidel Park, IT Corridors, Automobile Hub மூலமாக இன்றைக்குத் தமிழ்நாட்டு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. உங்களில் பலபேர், மதுரையிலிருந்தும், சென்னையிலிருந்தும் பணியைத் தொடங்கி On Site மூலமாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளீர்கள்.

உங்களுடைய Success Stories பலவற்றைத் திராவிடத்தால் வாழ்ந்தோம் என்ற பதிவுகளின் வீடியோக்களை நானும் பலமுறை பார்த்திருக்கின்றேன். உங்கள் ஒவ்வொருத்தரின் வெற்றி மற்றவர்களுக்கு எல்லாம் ஒரு Inspiration-ஆக அமைந்துள்ளது. உங்களை மாதிரி, இன்னும் பல ஆயிரம் பேரை உருவாக்க வேண்டும் என்று 3 ஆயிரம் பேருக்குப் பணி நியமன ஆணைகளை இன்றைக்குக் கொடுக்க இருக்கின்றோம். அதுமட்டுமல்ல, 6 ஆயிரம் பேருக்குப் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று நம்முடைய அரசு சார்பாக இங்கே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆக இருக்கிறது. அதற்கு என்னுடைய வாழ்த்துகள்.

எல்லாத்துக்கும் மேல, அரசுப்பள்ளியில் படித்துவிட்டு, உயர்கல்விக்காக வெளிநாடு

செல்கின்ற மாணவர்களுடைய முழு கல்விச் செலவையும், கட்டணச்செலவையும் அரசே ஏற்கும் என்கின்ற முக்கியமான திட்டத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, நான் முதல்வன் SCOUT திட்டம் மூலமாக, ஆண்டுக்கு 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, வெளிநாட்டுக்குச் சென்று Internship Training-ம், வேலைவாய்ப்பையும் நம்முடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, இந்த மாதிரியான மாணவர்கள் சாதிக்க நீங்கள் அத்தனைபேரும் வழிகாட்ட வேண்டும். வெளிநாடு வாழ் தமிழர்கள் உங்களுடைய நலனுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததுமே, அயலகத் தமிழர் நலனுக்காக ஒரு தனி அமைச்சகமே உருவாக்கினார். முக்கியமாக 2 அல்லது 3 தலைமுறையாக வெளிநாடுகளில் இருக்கக்கூடிய அயலகத்தமிழ் வம்சாவளியினர் தமிழ்நாட்டினுடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று, வேர்களைத் தேடி என்ற திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

தமிழ்ப்பொறியாளர்கள் நீங்கள் உங்களுடைய Ideas-யும், Supports-யும் நம்முடைய அரசுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டும். நீங்கள் பணி செய்கின்ற நாடுகளுக்கு வருகின்ற நம்முடைய தமிழ்ப் பிள்ளைகளுக்கு நீங்கள் உற்றத்துணையாக இருந்து, அவர்களுடைய வாழ்க்கையிலும் நீங்கள் ஒளியேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். அதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

நீங்கள் அயல்நாடுகளில் வாழ்ந்தாலும், உங்களைத் தமிழ்நாடும், தமிழ்நாடு அரசும், தமிழ் மக்களும் என்றைக்கும் மறக்கமாட்டார்கள். உங்களைப் போன்ற இன்னும் பல நூறு பொறியாளர்களை உருவாக்கவும், அப்படி உருவாக்குகின்ற பொறியாளர்களை வெற்றிகரமான தொழில் முனைவோர்களாக (Entrepreneurs) உயர்த்தவும் நம்முடைய அரசு என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும்.

தமிழ்நாடும், தமிழ்ச்சமுதாயமும் செழிக்கட்டும். சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தினுடைய பணிகள் அனைத்தும் சிறக்கட்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.

படமும் / செய்தியும்

மகாகவி பாரதியார் அவர்கள் நினைவு நாள்

மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளான மகாகவி நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 11.09.2025 அன்று சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.வே. ராஜாராமன், இ.ஆ.ப., வி.ஜி.பி. உலகத்தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோசம், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் திரு.எர்ணாவூர் அ. நாராயணன், அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தெரிந்துகொள்வோம்

வேளாண் தொழில் முனைவோர்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்த சிறப்புத் திட்டம்

- வேளாண் பொருட்களின் மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்தும் தொழில் துவங்கும் தொழில் முனைவோர்கள், நிறுவனங்களை ஊக்கப்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்” என்று மேற்கொள்ளப்பட்ட அறிவிப்பினைச் செயல்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- ரூ.10 கோடி வரையிலான புதிய மதிப்புக்கூட்டுதல் திட்டங்களுக்கு முதலீட்டு மானியமாக 25 சதவீதமும், பெண்கள், தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட்டாரங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு (சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அட்டவணைப்படி), ஆதிதிராவிடர், பழங்குடியினருக்குக் கூடுதலாக 10 சதவீதம் ஆக மொத்தம் 35 சதவீதம் என்ற வகையில் அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். இது தவிர அனைத்துப் பிரிவினருக்கும் 5 சதவீத வட்டி மானியம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.
- இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் தொழில்கள் தக்காளி, மிளகாய், மஞ்சள், வாழை, முருங்கை, மா, மல்லிகை, சிறுதானியங்கள் போன்ற பல்வேறு வேளாண்மை, தோட்டக்கலை விளைபொருட்களின் இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலை பதப்படுத்தும் திட்டங்களாக இருக்கவேண்டும்.
- அதாவது தக்காளிக் கூழ், தக்காளி கெச்சப், தக்காளி பவுடர், தக்காளி ஜாம், மாம்பழக்கூழ், மாம்பழ ஜாம், மா பவுடர், மஞ்சள் ஓலியோரெசின், மஞ்சள் இலை எண்ணெய், வாழைப்பழ ஸ்டார்ச் பவுடர், வாழை சிப்ஸ், முருங்கை இலைப் பொடி, முருங்கை விதை எண்ணெய், மிளகாய்ப் பொடி, மிளகாய் சாஸ், மிளகாய் எண்ணெய், மிளகாய் ஓலியோரெசின், மிளகாய் துகள்கள், மல்லிகை வாசனைத் திரவியங்கள், சிறுதானிய சத்துமாவு, சிறுதானிய தின்பண்டங்கள், சிறுதானிய கஞ்சிவகைகள், போன்ற பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட, பதப்படுத்தப்பட்ட பொருட்களும் இதில் அடங்கும். திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்புக் குறைந்தபட்சம் ஐந்து சதவீதமாக இருக்க வேண்டும், மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகப் பெறப்படவேண்டும்.
- இத்திட்டத்தில் பயன்பெற ஆர்வமுள்ள வேளாண் தொழில்முனைவோர்கள் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, வங்கியில் கடன் ஒப்புதல் பெறப்பட்டபின், மானியம் பெறுவதற்கான அவர்களுடைய விண்ணப்பங்கள் மாவட்ட தொழில்நுட்பக்குழு, மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழுவால் மதிப்பாய்வு செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோருக்கு அவர்களின் தொழில் திட்டத்திற்கேற்ப மானியத்தொகை அதிகபட்சமாக ரூ.1.50 கோடி வழங்கப்படும் மற்றும் 5 ஆண்டுகளுக்கு 5 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படும்.
- இந்த மானியத் தொகையானது, இரண்டு தவணைகளில், அதாவது முதல் தவணையாக 60 சதவீத மானியமும், இரண்டாம் தவணையாக 40 சதவீத மானியமும் வேளாண் தொழில் முனைவோர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக விடுவிக்கப்படும்.

★ ஒன்றிய, மாநில அரசு திட்டங்களின்கீழ் வேளாண் விளைபொருட்கள் மதிப்புக்கூட்டுதல் மற்றும் பதப்படுத்தும் தொழில்களுக்கு ஏற்கனவே நிதி உதவி பெற்ற பயனாளிகளும் இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

★ இந்த பயனாளிகளுக்கு, இத்திட்டத்தின் அதிகபட்ச மானியத் தொகையிலிருந்து ஏற்கனவே வேறு ஏதாவது திட்டத்தில் பெற்றுவரும் மானியத்தொகை போக மீதத்தொகை மானியமாக வழங்கப்படும்.

★ வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களைச் செயல்படுத்தி தரமான உற்பத்திப்பொருட்களை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் விற்பனை செய்து பொருளாதார ஏற்றம்பெற ஆர்வமுள்ள அனைத்துத் தொழில்முனைவோர்களும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

படமும் / செய்தியும்

"கப்பலோட்டிய தமிழன்" வ.உ.சிதம்பரனார் அவர்கள் பிறந்த நாள்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் 05.09.2025 அன்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 154ஆவது பிறந்த நாளை முன்னிட்டுச் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள வ.உ.சி. அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணைமேயர் திரு. மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. வே. ராஜாராமன் இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் போற்றிய மகத்தானத் திட்டங்கள்

அன்று...

"இலவச நிலம் வழங்கும் திட்டம்"

தமிழ்நாட்டு மக்களைக் கரையேற வைப்பதற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு வழங்கவும், விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், பாட்டாளிகளுக்கும் பக்கபலமாக இருக்கும் தமிழ்நாடு அரசானது, ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவசமாக நிலங்களை வழங்கும் நோக்கத்தில், தமிழ்நாடு முழுவதும் 24,949 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 26,321 ஏக்கர் நிலம் வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க **"ஏழை – எளிய விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம்"** திருவாரூரில் 17.09.2006 அன்று **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இன்று...

"உங்களுடன் ஸ்டாலின்"

தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் **"உங்களுடன் ஸ்டாலின்"** என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் 15.07.2025 அன்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், நடைபெற்ற சிறப்பு முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத்துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

தெரிந்துகொள்வோம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் ரூ.5,302 கோடி கடனுதவி வழங்கப்பட்டு 63,014 புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கம்

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று லைட்டர்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்குமாறு 08.09.2022 அன்று, மாண்புமிகு ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதினார், தமிழ்நாடு அரசின் தொடர் அழுத்தத்தின் காரணமாக ஒன்றிய அரசு 29.06.2023 அன்று ரூ.20-க்கும் குறைவான Pocket Lighters Gas Fuel & Non-refillable ஆகியவற்றிற்கு இறக்குமதி செய்ய தடை விதித்தது. இருப்பினும், மற்ற நாடுகளில் இருந்து லைட்டர்கள், உதிரிபாகங்களாக, இந்தியாவுக்குள் சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்டு, லைட்டர்களாகப் பொருத்தப்பட்டு மீண்டும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் தீப்பெட்டித் தொழிலின் உள்நாட்டு வர்த்தகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இது குறித்து மீண்டும் ஒன்றிய அமைச்சர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் 13.10.2024 அன்று பாக்கெட் லைட்டர்களின் பாகங்கள், gas fuelled, non-refillable or refillable lighters (சிகரெட் லைட்டர்கள்) ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்குக் கட்டுப்பாடு விதித்துள்ளது.

★ ரஷ்யா, உக்ரைன் போர், அமெரிக்கா பொருளாதாரக் கட்டுப்பாடு காரணமாகப் பொட்டாசியம் குளோரைடு இறக்குமதி தடை செய்யப்பட்டது. தீப்பெட்டித் தொழில் பாதிப்பு அடைந்தபோது தமிழ்நாடு அரசு துரிதமாக செயல்பட்டு சென்னை பெட்ரோ கெமிக்கல் மூலம் மொத்தமாகக் கொள்முதல் செய்து தீப்பெட்டி தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

★ உலகம் அறிந்த கோவில்பட்டி கடலை மிட்டாய், உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு பிப்ரவரி 24-ஆம் தேதி கோவில்பட்டி பகுதியில் கடலை மிட்டாய் குறுங்குழுமம் அமைக்கப்படும் என அறிவித்தார். அதன்படி, ரூ.6.42 கோடி அரசு மானியத்துடன், ரூ.7.13 கோடி மதிப்பீட்டில், கடலை மிட்டாய் உற்பத்திக்கான பொது வசதி மையம் அமைக்க, மாண்புமிகு சமூகநல மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாதத்திற்குள் இத்திட்டம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

★ தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் ஒவ்வொரு திட்டமும் கடைக்கோடி மக்களுக்குச் சென்றடையும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ MSME துறைக்குக் கடந்த 10 ஆண்டு காலமாக ரூ.3 ஆயிரத்து 617 கோடியே 62 இலட்சம் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த 5 ஆண்டுகளில் மட்டும், ரூ.6 ஆயிரத்து 626 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

★ கடந்த 4 ஆண்டு காலத்தில் 5 சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ். 2 ஆயிரத்து 57 கோடியே 90 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு. 5 ஆயிரத்து 301 கோடியே 63 இலட்சம் வங்கிக் கடனுதவி வழங்கி 63 ஆயிரத்து 14 நபர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின்கீழ் எங்களது குழந்தைக்குப் பிறவி இருதயக் குறைபாடு இருப்பதைக் கண்டறிந்து அறுவை சிகிச்சை செய்து நல்வாழ்வளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்…

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 20.09.2025 அன்று திருப்பூர் மாவட்டம், காங்கேயம் கார்மல் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட முகாமில் தேசியக் குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ் இருதய நோய் கண்டறியப்பட்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட 02 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நலப் பெட்டகங்களை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.08.2025 அன்று காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தினைத் துவக்கி வைத்ததைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் முதல் முகாம் வெள்ளகோவில் வட்டாரத்திலும், இரண்டாவது முகாம் திருப்பூர் மாநகராட்சியிலும், மூன்றாவது முகாம் பல்லடம் வட்டாரத்திலும், நான்காவது முகாம் திருப்பூர் (பெருமாநல்லூர்) வட்டாரத்திலும், ஐந்தாவது முகாம் சின்னக்காம்பாளையம் வட்டாரத்திலும், ஆறாவது முகாம் மூலனூர் வட்டாரத்திலும், ஏழாவது முகாம் காங்கேயம் வட்டாரத்திலும் நடைபெற்றது.

இம்முகாமில் பல்வேறு வகை சிறப்பு மருத்துவச் சேவைகள், புற்றுநோய்க் கண்டறியும் பரிசோதனைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு அட்டை வழங்குதல், அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல், இரத்தப் பரிசோதனை, இ.சி.ஜி, எக்கோ, எக்ஸ்ரே, யூ எஸ்ஜி, சளி பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, மார்பகப் புற்றுநோய் உள்ளிட்ட அனைத்து பரிசோதனைகளும்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவைசிகிச்சை. எலும்பு முறிவு, மகப்பேறு மருத்துவம், குழந்தைநலம், இருதயத்துறை, நரம்பியல்துறை, தோல்சிகிச்சை, பல்மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை மருத்துவம், ரேடியாலஜி, நுரையீரல் நோய்சிகிச்சை, நீரிழிவு நோய் சிகிச்சை, சித்தா, ஆயுர்வேதம் ஆகிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

“நலம் காக்கும் ஸ்டாலின்” முகாமானது ஒரு விரிவான மருத்துவ முகாம் ஆகும். ஒவ்வொரு துறையைச் சார்ந்த சிறப்பு மருத்துவர்கள் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளிலிருந்து வந்து சிகிச்சை அளித்தார்கள். தேவையான ஆய்வக உபகரணங்கள், பல்வேறு மருத்துவமனைகளிலிருந்து கொண்டுவரப்பட்டு பயன்படுத்தப்பப்பட்டது. முகாமிற்கு வரும் அனைவருக்கும் CBC, இரத்த யூரியா அளவு, இரத்த கிரியேட்டினைன் அளவு ஆகியன கட்டாயமாக எடுக்கப்பட்டது. 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்களுக்கு ECG கட்டாயமாக எடுக்கப்பட்டது. 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்குக் கர்ப்பபைவாய்ப் புற்றுநோய்ப் பரிசோதனை, மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மகப்பேறு மருத்துவத்திற்குச் சிறப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை திருப்பூர் மாவட்டத்தில் 07 நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 10,255 பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சிப் பகுதியைச் சேர்ந்த குழந்தை யாழினி அவர்களின் தாயார் திருமதி இசைப்பிரியா அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்,

என் பெயர் இசைப்பிரியா, நான் குடும்பத்துடன் காங்கேயம் நகராட்சி, பழையகோட்டை சாலை பகுதியில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் ரமேஷ், தனியார் அரிசி ஆலையில் பணிபுரிந்து வருகிறார். எங்களது குழந்தை யாழினிக்கு 1 வருடம் 2 மாதங்கள் ஆகிறது. இச்சூழ்நிலையில் பழையகோட்டை அங்கன்வாடி மையத்தில் காங்கேயம் வட்டார RBSK குழுவினர் குழந்தைகளுக்குப் பரிசோதனை மேற்கொள்ளவுள்ளார்கள் என அங்கன்வாடி பணியாளர் தெரிவித்தார்க. அதன்படி, எங்களது

குழந்தை யாழினி அவர்கள்

குழந்தையைப் பரிசோதனைக்கு அழைத்துச் சென்றோம். காங்கேயம் வட்டார RBSK குழுவினர் எங்களது குழந்தையைப் பரிசோதனை மேற்கொண்ட போது பிறவி இருதயக் குறைபாடு இருந்தது கண்டறியப்பட்டது.

தொடர்ந்து, மாவட்ட தொடக்க தலையீட்டு மையத்திற்கு RBSK குழுவினர் அழைத்துச் சென்று மீண்டும் பரிசோதனை மேற்கொண்டபோது ரூ.5 இலட்சம் செலவாகும் என மருத்துவர்கள் தெரிவித்தார்கள். மிகுந்த மன வேதனைக்கு உள்ளானோம். அத்தகைய சூழ்நிலையில் தமிழ்நாடு அரசின் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள அரசு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அதன்படி கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக ரூ.5 இலட்சம் செலவில் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தற்போது எங்களது குழந்தை மிகவும் நலமாக இருக்கிறது. மேலும், தற்போது எங்களது குழந்தையைத் தொடர்ந்து மருத்துவக் குழுவினர் கண்காணித்து வருகிறார்கள் .

எங்களது குழந்தைக்குப் பிறவி இருதய குறைபாடு இருப்பதைக் கண்டறியப்பட்டவுடன் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு உதவிடும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் எங்களது குழந்தைக்கு நல்வாழ்வளித்து நலன் காக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற திருப்பூர் மாவட்டம், காங்கேயம், மருதுறை ஊராட்சி, சிக்காம்பாளையம் பகுதியைச் சேர்ந்த குழந்தை ரிதன்யா அவர்களின் தாயார் திருமதி மகேஸ்வரி அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்,

என் பெயர் மகேஸ்வரி, நான் குடும்பத்துடன் காங்கேயம், மருதுறை ஊராட்சி, சிக்காம்பாளையம் பகுதியில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் ரமேஷ், வீடு மற்றும் கடைகளுக்கு பால் விநியோகம் செய்து வருகிறார். எங்களது குழந்தை ரிதன்யாவிற்கு 1 வருடம் 3 மாதங்கள் ஆகிறது. சிக்காம்பாளையம் அங்கன்வாடி மையத்திற்கு எங்கள் குழந்தையை எடை மற்றும் உயரம் பரிசோதனை செய்ய மாதந்தோறும் அழைத்துச் செல்வோம். 25.09.2024 அன்று காங்கேயம் வட்டார RBSK குழுவினர் எங்களது குழந்தைகளுக்குப் பரிசோதனை மேற்கொண்டார்கள்.

குழந்தை ரிதன்யா அவர்கள்

காங்கேயம் வட்டார RBSK குழுவினர் எங்களது குழந்தையைப் பரிசோதனை மேற்கொண்டபோது பிறவி இருதயக் குறைபாடு இருந்தது கண்டறியப்பட்டது. தொடர்ந்து 15.11.2024 அன்று மாவட்ட தொடக்கத் தலையீட்டு மையத்திற்கு RBSK குழுவினர் அழைத்துச் சென்று மீண்டும் பரிசோதனை மேற்கொண்டு மருத்துவர்களின் ஆலோசனையின் படி 18.11.2024 அன்று கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக ரூ.5 இலட்சம் செலவில் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தற்போது எங்களது குழந்தை மிகவும் நலமாக இருக்கிறது. மேலும், 30.12.2024 அன்று மீண்டும் RBSK குழுவினர் வருகை தந்து எங்களது குழந்தைக்குப் பரிசோதனை மேற்கொண்டு குழந்தை நலமுடன் இருப்பதாகக் கூறினார்கள். தற்போது எங்களது குழந்தையைத் தொடர்ந்து மருத்துவக் குழுவினர் கண்காணித்து வருகிறார்கள்.

எங்களது குழந்தைக்குப் பிறவி இருதயக் குறைபாடு இருப்பதைக் கண்டறியப்பட்டவுடன் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு உதவிடும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் எங்களது குழந்தைக்கு நல்வாழ்வளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருப்பூர் மாவட்டம்.

தெரிந்துகொள்வோம்

அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்க வழிவகைகளை ஆராய வல்லுனர் குழு அமைப்பு

★ அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கடந்த 1962ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் நிர்மானிக்கப்பட்டது. மேற்படி ஆலை தினசரி 1,250 டன்கள் அரவைத் திறனுடனும், 2.15 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆண்டு அரவைத் திறனுடனும் ஆரம்பிக்கப்பட்டது.

★ அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தில் தினசரி 55,000 லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட எரிசாராய உற்பத்தி ஆலையும், 30,000 லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட எத்தனால் ஆலையும் செயல்பட்டு வருகிறது.

★ அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் அரவைக்குப் போதுமான கரும்பு இல்லாத காரணத்தாலும், சுமார் 60 ஆண்டுகள் பழமையான இயந்திரங்களின் காரணமாக அரவையின்போது அடிக்கடி ஏற்பட்ட இயந்திர கோளாறுகள் காரணமாகவும் கடந்த 2023-2024 அரவைப் பருவம் முதல் தற்காலிகமாக ஆலை இயங்காமல் இருந்து வருகிறது.

★ அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைப் பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் புனரமைத்து மீண்டும் இயக்க வேண்டுமென தொடர்ந்து அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

★ விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கையை உடனடியாக ஏற்று, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் புனரமைத்து மீண்டும் இயக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஏதுவாக ஒரு வல்லுனர் குழு அமைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிப்பை வெளியிட்டார்கள்.

★ சர்க்கரைத்துறை இயக்குநர் தலைமையில் கூடுதல் இயக்குநர், சர்க்கரைத்துறை, தொழில்நுட்பம் சார்ந்த உயர் அலுவலர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள், கரும்பு இனப்பெருக்க நிறுவன விஞ்ஞானிகள், திருப்பூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆகியோரை உள்ளடக்கிய பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு வல்லுனர் குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டது.

★ தற்போது அமைக்கப்பட்டுள்ள வல்லுனர் குழு அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை ஆய்வு செய்து, விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரது கருத்துக்களையும் கேட்டறிந்து அரசுக்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்கும். அந்தக் குழு அறிக்கையின் அடிப்படையில், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவது குறித்துத் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். ■

"உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை" கொண்டுவந்த மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை 15.07.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டம், டவுன் லெஷ்மி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்" மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.சுகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.அப்துல் வஹாப் அவர்கள், மாநகராட்சி மேயர் திரு. கோ.ராமகிருஷ்ணன் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர் மோனிகா ராணா, இ.ஆ.ப., அவர்கள், துணை மேயர் திரு. கே.ஆர்.ராஜூ அவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி முகாமினைப் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் 3,768 முகாம்கள் கிராமப்புறங்களிலுள்ள 6,232 முகாம்கள் ஆக மொத்தம் 10,000 முகாம்கள் மூலம் "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை" அறிமுகப்படுத்தி, கிராமப்புறங்களில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளும், நகர் பகுதிகளில் 13 துறைகள் மூலம் 43 சேவைகள் பொதுமக்களுக்குக் கிடைப்பதற்காக இத்திட்டத்தினைச் சிதம்பரத்தில் துவக்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களால் வழங்கப்படும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காணப்படும்.

அதன்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடங்கப்பட்டு, மாநகராட்சிப் பகுதிகளில் 55 வார்டுகளுக்கு

38 முகாம்களும், களக்காடு, விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய 3 நகராட்சிப் பகுதிகளில் 69 வார்டுகளுக்கு 29 முகாம்களும், 17 பேரூராட்சிகளைச் சார்ந்த 273 வார்டுகளுக்கு 34 முகாம்களும், ஊராட்சிப் பகுதிகளுக்கு 154 முகாம்களும் என 255 முகாம்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் 15.07.2025 வரை நடைபெற்றது.

இம்முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்கான கோரிக்கை மனுக்கள் பெறுவதற்கு மூன்று அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவத்துறையின் மூலம் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அன்றாடம் பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வேளாண்மை உழவர்நலத்துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை போன்ற துறைகளின் மூலம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்குச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தாட்கோ, மாவட்ட தொழில்மையம் போன்ற துறைகளின் மூலம் மானியத்தில் கடனுதவிகள் வழங்கப்பட்டுத் தொழில் முனைவோர்களாக மாறுவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. கலைஞர் கைவினைத்திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் போன்ற திட்டங்களில் பயனடைந்து புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கி, படித்த இளைஞர்கள், தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்கள் இத்துறைகளை அணுகி தேவைப்படும் சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துத் தொழில் தொடங்குவதற்கு வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும். நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்

முகாமினைப்" பயன்படுத்தித் தங்களுக்குத் தேவையான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கோரிக்கை மனு வழங்கி 5 நிமிடத்தில் தீர்வு கண்ட பயனாளி திரு.சுப்பிரமணியன் அவர்கள், நம்மிடம் தெரிவிக்கையில்,

எனது பெயர் சுப்பிரமணியன் திருநெல்வேலி மாநகராட்சி 25ஆவது வார்டில் குடியிருந்து வருகிறேன். குடும்ப அட்டையில் பெயர் மாற்றம் செய்யக் கோரி மூன்று முறை விண்ணப்பம் அளித்திருந்தேன். உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் குறித்துத் தன்னார்வலர்கள் எனது வீட்டிற்கே வந்து முகாம் குறித்த கையேட்டினை வழங்கி முகாமில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை ஏதேனும் இருந்தாலும் விண்ணப்பித்துப் பயனடைலாம் எனத் தெரிவித்தார்கள். லெட்சுமி மஹாலில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்" கலந்து கொண்டு ரேஷன் கார்டில் பெயர் மாற்றுவதற்கு விண்ணப்பம் அளித்தேன். 5 நிமிடத்தில் எனது விண்ணப்பம் ஏற்கப்பட்டு உடனடியாகப் பெயர் மாற்றம் செய்து எனக்கு ஆணை வழங்கினார்கள். "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தைக்" கொண்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி

மண்டல இணை இயக்குநர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம்

சென்னை இராஜா அண்ணாமலைபுரம், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, கூட்டரங்கில் 23.09.2025 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்

படமும் / செய்தியும்

திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சென்னை, திருச்சிராப்பள்ளி மண்டல இணை இயக்குநர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. ச. செல்வராஜ், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) முனைவர் இரா. பாஸ்கரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம், எலத்தூர் ஏரி மாநிலத்தின் மூன்றாவது உயிரியல் பாரம்பரியத் தளமாக அறிவிப்பு

★ தமிழ்நாடு அரசு, உயிரியல் பன்மைச் சட்டம் 2002, பிரிவு 37(1)ன் கீழ், அரிட்டாப்பட்டியை நவம்பர் 2022 இல் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளமாக அறிவித்த, காசம்பட்டி மார்ச் 2025இல் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 37.42.50 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட ஈரோடு மாவட்டத்திலுள்ள எலத்தூர் ஏரியை மாநிலத்தின் மூன்றாவது உயிரியல் பாரம்பரியத் தளமாக அறிவித்துள்ளது.

★ “எலத்தூர் ஏரி என்பது ஆழமான நீர்நிலைகள், சேற்றுப் பள்ளத்தாக்குகள், புலம்பெயர்ந்த பறவைகள், சமூக மரபுகள் ஆகியவற்றின் துடிப்பான நீர்நிலை ஆகும். இது இயற்கை, மக்களின் மீள்தன்மைக்கு ஒரு உண்மையான சான்றாகும். இதை ஒரு பல்லுயிர்ப் பாரம்பரியத் தளமாக அறிவிப்பது, பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள் கைகோர்த்துச் செல்வதை உறுதி செய்யும் அதே வேளையில், அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள், சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. இந்த நடவடிக்கை கட்டுப்பாடுகள் பற்றியது அல்ல, மாறாக அதிகாரமளித்தல், விலைமதிப்பற்ற பாரம்பரியத்தின் பாதுகாவலர்களாக உள்ளூர்ச் சமூகங்களுக்கு அங்கீகாரம் பற்றியது. பல்லுயிர் பாதுகாப்பில் தமிழ்நாடு தொடர்ந்து தலைமைத்துவத்தைக் காட்டியுள்ளது, மேலும் எலத்தூர் இந்தப் பயணத்தில் சேருகிறது, இந்த ஏரியின் அதிசயங்கள் வரும் தலைமுறையினர் அறிந்துகொள்ளவும் கொண்டாடப்படுவது, பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது.”

★ ஏற்கனவே அரிட்டாப்பட்டி 21.11.2022-லும் அதனைத் தொடர்ந்து காசம்பட்டி 12.03.2025-லும் அறிவிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

★ எலத்தூர் ஏரி ஒரு பரிணாமச் சூழலியல் முக்கியத் தளமாகவும், புலம்பெயரும், இடம்பெயராத பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள், பல்வகை ஈர நில அமைப்புகளுக்கு முக்கிய வாழ்விடமாகவும் விளங்குகிறது. இதன் ஆழமான நீர்ப்பரப்புகள், அடர்த்தியான கரைகள், சளிக்காடுகள், கற்களால் ஆன பகுதியில் காணப்படும் இயற்கைக் காட்சிகள், செழுமையான உயிர் பல்வேறு தன்மையைத் தாங்கிக் கொண்டுள்ளன.

★ புலம்பெயர்ந்துவரும் பருவங்களில் சுமார் 5,000 பறவைகள் எலத்தூர் ஏரியில் கூடுகின்றன. இந்த ஏரி, ஆபத்தான நிலையில் உள்ள ஸ்டெப்ப் ஈகிள், இரண்டு அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள் (நதிக்காக், பெரிய புள்ளி ஈகிள்) மேலும், ஐந்து உயிரினங்களான (ஆசிய கம்பளக்கழுத்து நாரை, சிவந்த கழுத்துப் பறவைகள், ஓவிய நாரை, கிழக்கு நீர்த்தாரை, கருந்தலை வெண்ணாரை) ஆகியவற்றைப் பாதுகாக்கும் இடமாக உள்ளது. மொத்தமாக, இங்கே 187 வகையான பறவைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

★ இங்குக் காணப்படும் முக்கிய பறவை இனங்கள் பின்வருமாறு: நார்தெர்ன் பின்டெய்ல், கர்கனேய் (Garganey),

- வாக்டெயில்கள் (Wagtails), சாண்ட்பைபர்கள் (Sandpipers), வார்பிளர்கள் (Warblers), பார்-ஹெடெட் கூஸ் (Bar-headed Goose), கிரீன்-விங்க்டு டீல் (Green-winged Teal), ஷவுலர் (Shoveler), விஜியன் (Wigeon), ஷ்ரைக் (Shrike).
- எலத்தூர் ஏரியில் பதிவாகியுள்ள முக்கிய உயிரினங்கள் பின்வருமாறு: 38 தாவர வகைகள், 35 பட்டாம்பூச்சி வகைகள், 12 தட்டான் பூச்சி (Dragonflies), 12 இழைச்சிட்டிகள் (Damselflies), 12 ஊர்வன (Reptiles), 7 பாலூட்டிகள் (Mammals), நீர்நில வாழ்வன (Amphibians), மீன்கள், முதுகெலும்பில்லா பிராணிகள் (Invertebrates) ஆகியனவாகும்.
- மேலும், எலத்தூர் ஏரி ஒரு உயிரியல் பரம்பரை மையமாகச் (Genetic Diversity) செயல்பட்டு, பருவநிலை மாற்றத்தினைத் தழுவும் திறனையும், நிலைத்தன்மையையும் வழங்குகிறது.
- ஏரியின் பாதுகாப்புச் சுற்றுச்சூழல் நன்மைகளை மட்டுமல்லாது, இந்தச் சூழலியலுடன் நெருக்கமாகத் தொடர்புடைய பண்பாட்டு மரபுகள், பாரம்பரியத்தையும் பாதுகாக்கிறது.
- எலத்தூர் ஏரியை ஒரு உயிரியல் பாரம்பரியத் தளமாக அறிவிப்பதன் மூலம், தமிழ்நாடு, பாதுகாப்பு, நிலைத்த பாரம்பரிய மேலாண்மையில் தனது தலைமைப் பங்கை வலுப்படுத்துகிறது.
- இந்த அங்கீகாரம், எலத்தூர் ஏரியின் உயிர் பல்வேறு தன்மை, பரிணாமப் பங்கு, பண்பாட்டு முக்கியத்துவங்களைப் பாதுகாக்கின்றது. இது எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஒரு மரபுரிமைப் பண்பாகத் தொடரும்.

சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில், முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் அவர்களின் 134-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 29.09.2025 அன்று சென்னை தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

பயிற்சி வினா - விடைத்தாள்

1. காரணம் மற்றும் வலியுறுத்துதல் :

வலியுறுத்துதல் [A] : C.N. அண்ணாதுரை சிறு தொழிற்சங்கங்களை அமைக்க ஏற்பாடு செய்தார்.

காரணம் [R] :தொழிலாளர் நலன் என்பது நேரம் மற்றும் இடத்துடன் தொடர்புடையது.

(A) [A] சரி, ஆனால் (R) தவறு

(B) [A] ம் [R] ம் சரி; மற்றும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம்

(C) (A) தவறு (R] சரி

(D) [A] ம் [R] ம் சரி ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் அல்ல

2. பின்வருவனவற்றுள் சரியான பொருத்தத்தைத் தேர்ந்தெடு

(1) மதுரை காந்தி	–	N.M.R. சுப்புராமன்
(2) தட்சிணா காந்தி	–	இராஜாஜி
(3) வித்யாலயா அய்யா	–	காமராஜ்
(4) தமிழ்நாடு நூலக இயக்கத்தின் தந்தை	–	A. ராமசாமி

(A) (1) ம் (3) ம் சரி

(B) (1) ம் (2) ம் சரி

(C) (2) ம் (3) ம் சரி

(D) (3) ம் (4) ம் சரி

3. ராவ் பகதூர் சர் அ.த. பன்னீர்செல்வம் __________ தலைவராக இருந்தார். இதற்கு முன்பு ஆளுநர் எர்ஸ்கினின் நிர்வாகக் குழுவில் பணியாற்றினார்.

(A) சுயராஜ்யக் கட்சி

(B) காங்கிரஸ் கட்சி

(C) நீதிக் கட்சி

(D) சமாஜ்வாதி கட்சி

4. 15ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, மாநிலங்களுக்கு GSDP-ல் 4.0% நிதிப்பற்றாகுறை அனுமதிக்கப்படும், அதில் 0.5% பின்வரும் துறையைச் சீர்திருத்துவதற்கு இணைக்கப்படும்.

(A) விவசாயத் துறை

(B) எரிசக்தித் துறை

(C) தொழில் துறை

(D) சேவை துறை

5. கீழ்காண்பனவற்றுள் ஆலய நுழைவுப் போராட்டத்தினைப் பற்றிய உண்மையான கூற்றினைக் கூறு:

(i) நவம்பர் 1, 1817 ல் பிரிட்டிஷ் அரசு மெட்ராஸ் பிரசிடென்சியில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது.

(ii) இது கோவில் நிர்வாகத்தின் ஒரே மாதிரியான அதிகாரங்களை ஆதரிக்கிறது.

(iii) இது வங்காளச் சட்டம் நம்பர் XIX, 1810 ல் உள்ள மாதிரியாக இருக்கிறது.

(A) (ii) மற்றும் (iii) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (iii) மட்டும்

6. "வலிமையான எதிரியின் முன் அடிபணிதலின் பாசாங்கும் சரணடைதலின் ஒத்திவைப்பு" என்ற பழமொழியின்படி ஆங்கிலேயருக்கு எதிரான பாளையக்காரர் கூட்டமைப்புக்கு வழிகாட்டிய நூல்.

(A) மகாபாரதம்

(B) இராமாயணம்

(C) பஞ்சதந்திரம்

(D) சிலப்பதிகாரம்

7. கீழ்கண்டவற்றைக் காலவரிசைப்படுத்துக:

(1) பாரத மாதா சங்கம்

(2) சென்னை மகாஜன சபை

(3) ஹோம் ரூல் இயக்கம்

(4) மதராஸ் திராவிட சங்கம்

(A) (3), (4), (2), (1)

(B) (2), (1), (4), (3)

(C) (1), (2), (3), (4)

(D) (4), (3), (2), (1)

8. வெண்மை எனப்படுவது யாதென வள்ளுவர் கூறுகிறார்?

(A) தாம் அறிவொளி படைத்தவர்கள் என்று நினைக்கும் செருக்கு

(B) உடம்பை ஆடையால் மறைப்பது போல குற்றங்களை மறைத்தல்

(C) 'கண்டதே காட்சி', 'கொண்டதே கொள்கை' என்று நடப்பது

(D) மறை நூல்கள் கூறும் அறிவுரையை ஏற்காதிருத்தல்

9. "மன்னரைச் சேர்ந்தொழுகுதல், குறிப்பறிதல், அவையறிதல்" ஆகிய அதிகாரங்களில் வள்ளுவர் உணர்த்துவன யாவை?

1) அமைச்சரின் நடத்தை பற்றியது

(2) அமைச்சர் மன்னனுக்கு ஆலோசனை வழங்குவது

(3) மன்னன் பிற மன்னர்களோடு நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியது

(4) உளவியல் கருத்துக்கள் நிறைந்தது

(A) (1) மற்றும் (3) மட்டும்

(B) (2) மற்றும் (4) மட்டும்

(C) (3) மட்டும்

(D) (1), (2) மற்றும் (4) மட்டும்

10. "மக்களே போல்வர் 'கயவர்' அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்" -என்ற குறளில் 'கயவர்' என யாரைக் குறிப்பிடுகின்றார்?

(A) பொறுப்பில்லாதவர்கள் (B) விருப்பம்போல் நடப்பவர்கள்

(C) நெறியற்று வாழ்பவர்கள் (D) இவை மூன்றும்

11. "துறவிகளுக்கு இகழ்ச்சி வராமல் இருக்க" அவர்கள் என்ன ஒழுக்கம் மேற்கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A) கள்ளாமை (B) கொல்லாமை

(C) கோபம் கொள்ளாமை (D) ஆசைப்படாமை

12. யாருடைய செல்வத்தை வள்ளுவர் நீர் நிறைந்த ஊருணியோடு ஒப்பிடுகிறார்?

(A) பேரறிவாளன் (B) தீ நட்பு

(C) சூது (D) கயவர்

13. "காகிதச் சங்கிலிகள்" என்ற புதினத்தின் ஆசிரியர் யார்?

(A) சுஜாதா ரங்கராஜன் (B) வாலி

(C) ஜெயகாந்தன் (D) புதுமைப்பித்தன்

14. ஆசிரியர்களை அவர்களது இதழ்களுடன் பொருத்துக :

ஆசிரியர்		இதழ்கள்
(a) ஜெயகாந்தன்	–	1. தென்றல்
(b) நா. பார்த்தசாரதி	–	2. அன்னம் விடு தூது
(c) கண்ணதாசன்	–	3. ஞானரதம்
(d) மீரா	–	4. தீபம்

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	3	4
(B)	4	3	2	1
(C)	1	2	4	3
(D)	3	4	1	2

15. "கழுமலம்" என்ற இடத்துப் போர் நிகழ்வைக் கூறுவது

(A) குறுந்தொகை (B) அகநானூறு

(C) நற்றிணை (D) பரிபாடல்

16. "மலையுளே பிறப்பினும் மலைக்கு
அவைதாம் என் செய்யும்" -என்ற பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?

(A) குறுந்தொகை (B) அகநானூறு

(C) கலித்தொகை (D) நற்றிணை

17. ஆஷ் கொலை வழக்கில் முதல் குற்றவாளி யார்?

A) சங்கர கிருஷ்ணன்

(B) நீலகண்ட பிரம்மச்சாரி

(C) மாடசாமி

(D) வாஞ்சிநாதன்

18. பின்வருவனவற்றுள் சமண அறிஞர்களின் முக்கிய கற்றல் மையமாக இருந்த இடம் எது?

A) மதுரை

(B) திருச்சி

(C) தஞ்சாவூர்

(D) திருவாலங்காடு

19. மன்னர்களின் பட்டங்களைப் பொருத்துக :

(a) பாண்டியர் – 1. ஆதவன்

(b) சேரர் – 2. திதியன்

(c) சோழர் – 3. செழியன்

(d) ஆய் – 4. செம்பியன்

	(a)	(b)	(c)	(d)
(A)	3	4	2	1
(B)	3	1	4	2
(C)	3	2	1	4
(D)	4	3	1	2

20. தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC) அமைந்துள்ள இடம்

(A) சென்னை

(B) திருச்சிராப்பள்ளி

(C) கோயம்புத்தூர்

(D) மதுரை

21. தமிழ்நாடு அரசின் "புதுமைப் பெண்" திட்டம் எதை உறுதிப்படுத்துகிறது?

(A) அரசியலில் பெண்களின் பங்கு

(B) பெண்களுக்கு உயர் கல்வி

(C) பெண்களுக்கான வேலைவாய்ப்பை அதிகப்படுத்துதல்

(D) திருமண உதவித் திட்டம்

22. 2017 - 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018-2019-இல் மூன்றாவது சுற்றில் சுகாதாரக் குறியீட்டின் அடிப்படையில் தமிழ்நாடு _________ பிரிவைச் சேர்ந்ததாகிறது.

(A) மேம்படுத்தப்பட்ட தரவரிசை

(B) தக்கவைத்த தரவரிசை

(C) சீர்குன்றல்/சரிவு தரவரிசை

(D) அதிகரிக்கும் எதிர்மறைச் செயல்திறன்

23. மாநிலத்தில் குடும்ப நலன் மற்றும் குழந்தைகள் சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்த ________ தமிழ்நாடு பின்பற்றுகிறது.

(A) சமூகத் தேவைகள் மதிப்பீட்டு அணுகுமுறை

(B) மூலோபாய திட்ட அணுகுமுறை

(C) மேலிருந்து கீழ் அணுகுமுறை

(D) மூலோபாய மேலாண்மை அணுகுமுறை

24. 1956-ல் மத்திய சுகாதாரக் கல்வி பணியகத்தின் முதன்மைக் கடமை

(A) இலவச சுகாதார சேவை மற்றும் செயல்பாடுகள்

(B) ஆரம்ப நிலை - சுகாதாரக் கல்வி

(C) அனைவருக்கும் ஆரோக்கியம்

(D) பல்வேறு பிரிவுகளின் மூலம் சுகாதாரக் கல்வியை ஒருங்கிணைந்து மேம்படுத்துதல்

25. AYUSH அமைப்பின் குடும்பத்தில் சமீபத்தில் சேர்க்கப்பட்ட முறை யாது?

(A) ரிப்லெக்ஸ்ஸாலஜி (B) சோவ ரிக்பா

(C) இயற்கை மருத்துவம் (D) அக்குப்பஞ்சர்

விடைகள்

1.–(D)	2.–(A)	3.–(C)	4.–(B)	5.–(B)
6.–(C)	7.–(B)	8.–(A)	9.–(D)	10.–(D)
11.–(A)	12.–(A)	13.–(A)	14.–(D)	15.–(B)
16.–(C)	17.–(B)	18.–(A)	19.–(B)	20.–(B)
21.–(B)	22.–(A)	23.–(A)	24.–(D)	25.–(B)

கீழ்க்கண்ட தலைப்புக்கான சிறந்த கட்டுரைக்கு சிறப்புப் பரிசு, புகைப்படத்துடன் கூடிய கட்டுரை அடுத்தமாத இதழில் இடம்பெறும்.

தலைப்பு:

நாட்டிலேயே அதிவேகமாக வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் நம்முடைய தமிழ்நாட்டை நோக்கிப் புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கும் ஜெர்மனி, இங்கிலாந்து நாட்டிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தால் ஏற்பட்ட தாக்கம் குறித்து விவரிக்கவும்.

கட்டுரை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: tamilarasujournal@gmail.com

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள், 16.09.2025 அன்று சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முழுவதும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ரூ.3,500 கோடி வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கினார்.

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department, Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,